# நாயகப் பெருமான்



நாரா நாச்சியப்பன்

RANI MEYYAMMAI PRIMARY SCHOOL
MADRAS-600 020

331
67

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நாயகப் பெருமான்

நாரா நாச்சியப்பன்

தமிழாலயம்
137, ஜானி ஜான் கான் தெரு,
சென்னை-600 014.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | — | Nayagap Peruman |
| Author | — | Nara Nachiappan |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | 14-11-1983 |
| Copy right holder | — | Author |
| Paper Used | — | 10. 9 kg White printing |
| Number of pages | — | 72 |
| Number of copies | — | 1200 |
| Printers | — | Novel Art Printers<br>Madras-600 014<br>Phone : 82731 |
| Binding | — | Paper Back |
| Price | — | Rs. 4/= (Rupees Four) |
| Subject | — | Historical incidents in the Life of Prophet Mohammed. |
| Publishers | — | Thamizhalayam<br>137, Jani Jan khan Road<br>Madras - 600 014 |

# பதிப்புரை

அல்லாஹ் இறைவன். அவன் அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். எல்லாம் வல்லவன். எங்கும் நிறைந்தவன். அவனுல் அருளப் பெற்றது திருக்குர்ஆன் வேதம். அவனை வழிபட்டு வாழும் மார்க்கம் இஸ்லாம். அவனுடைய திருத்தூதர் நபிகள் நாயகம். அவர்களின் திருப்பெயர் முகம்மது நபி.

நாயகப் பெருமான் அவர்களால் உலகெங்கும் உண்மையான இறைநெறி பரவிற்று. அவர்கள் வாழ்ந்து காட்டிய பண்பு நெறிகள் உலக மக்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக அமைந்தன.



அவர்கள் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் இறையருளின் மேன்மையையும், அறிவு நிலையின் உயர்வையும், ஒழுக்க வாழ்வின் சிறப்பையும், அருள் நெறியையும், அன்பின் தன்மையையும் எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

நாயகப் பெருமான் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைச் சமய வேறுபாடு கருதாது எல்லா மக்களும் அறிந்து ஒழுக வேண்டும் என்ற கருத்தோடு, நல்ல தமிழ் நடையில், சிறுவர்களுக்கேற்ற முறையில் நாரா நாச்சியப்பன் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும், சிறுவர்களுக்கு இந்நூலினை அறிமுகப்படுத்திப் பயன்கொள்ள வேண்டுகிறோம்.

—தமிழாலயம்

# பொருளடக்கம்


1. நபிநாயகம் பிறந்தார் ... 1
2. தேர்ந்தெடுத்த சிற்றப்பா ... 2
3. துறவியாரின் எச்சரிக்கை ... 6
4. கலகம் தீர்த்த காவலர் ... 7
5. வாழ்க்கைத் துணையாய் வாய்த்த பிராட்டியார் ... 9
6. அன்பின் அடிமை ஆனவர் ... 11
7. தேவதூதரும் திரு ஒளித் தோற்றமும் ... 13
8. சிறிய தந்தையின் சீற்றம் ... 16
9. மக்கா மலையை முட்டிய பேரொலி ... 18
10. காதில் விழுந்த வேத வாசகம் ... 22
11 இருட்டுக் குகையில் இறைவனும் இருந்தான் ... 25
12. விடுதலையின் விலை கல்வி ... 27
13. உள்ளந் தளராத வீரர் ... 29
14. இணையற்ற வீரர் இப்னு நலர் ... 31
15. "ஆளானோம் தங்களுக்கே ஐயா" ... 33
16. உயிருக்குயிரான பெருமான் ... 35
17. வரும்படியன்று வாளே கொடுப்போம்! ... 37
18. நன்றி காத்த நல்ல மனிதர் ... 39
19. உள்ளத்தின் உள்ளே உள்ளான் ... 40
20. நஞ்சிட்ட நயவஞ்சகி ... 41
21. மகளைக் கொன்றவனுக்கும் மன்னிப்பு ... 43
22. பகைவர்களுக்கும் வாழ்த்து ... 45
23. பெருமான் இருப்பதே பெரிது ... 46
24. நிழலை வெறுத்த அன்பர் ... 49
25. வள்ளல் பெற்ற திருமகள் ... 50
26. கவிஞன் பெற்ற பரிசு ... 52
27. பாவிக்காகச் செய்த பிரார்த்தனை ... 54
28. காப்பவன் இறைவனே! ... 58
29. கடன் தீர்த்த பெருமான் ... 59
30. முகம்மது ஒரு தூதரே! ... 62

# 1. நபிநாயகம் பிறந்தார்

அரபி நன்னாட்டில் மக்காப் பெரு நகரில் பெருமையும் புகழும் மிக்க வீர குறைஷியர் குலத்தில் அப்துல்லா என்னும் பெரியாருக்கும் ஆமினா என்னும் பெருமாட்டிக்கும் அருமை மகனாகப் பிறந்தார், உலகில் ஒரு தனி நெறியைக் காட்டி, ஒருதெய்வக் கொள்கையை நிலைநாட்டி, நல்லற வழியையும், சகோதர உணர்ச்சியையும் வேர் கொள்ளச் செய்ய வந்த திருநபிகளின் இறுதியானவரும் முழுமை பெற்ற வருமாகிய முகம்மது நபி அவர்கள்.

கதிரவனின் வெம்மையால் துயருறும் காலத்து, உயிர் இனங்களுக்கு அவ் வெம்மை நீக்கி இன்பந்தர உறு துணையாய்ப் படர்ந்திருக்கும் மர நிழலைப் போலவும், இழிவு மனப்பான்மையும் கொலைத் தன்மையும் சேர்த்து உண்டாக்கும் பாவமெனும் கொடிய நோயினால் துயருறும் உலகிற்கு அந் நோய் தவிர்த்திடும் மருந்தைப் போலவும், தீன் என்ற நன் மார்க்கமாகிய பயிருக்குச் செழிப்பூட்டப் பெய்த மழையைப் போலவும், குறைஷிக் குலத்துக்கே ஒரு திலகம் போலவும், பெருவையத்தின் அறியாமை இருளை நீக்க வந்த ஒரு மணி விளக்குப் போலவும் முகமது நபி அவர்கள் பிறந்தார்கள்.

அவர்கள் பிறந்து வந்த நாள் ரபியுல் அவ்வல் மாதம் பனிரெண்டாம் நாள் திங்கட்கிழமை யாகும்.

நபிநாயக மவர்கள் பிறக்கு முன்னே அவருடைய தந்தையார் அவர்கள், வாணிபம் செய்வதற்காக ஷாம் நாடு சென்று திரும்பி வரும் வழியில் நோய் வாய்ப்பட்டு இறந்து போனார்கள்.

பெருமானாருடைய தாயாரவர்களும் அவர் களுக்கு வயது ஆறு ஆகும் போது, வெளியூர் சென் றிருந்த போது காலமாகி விட்டார்கள்.

எனவே, இறைவனின் திருத்தூதரவர்கள் இள மைப் பருவத்தில் அவர்களுடைய பாட்டனாராகிய அப்துல் முத்தலிப் அவர்களின் ஆதரவில் வளர்ந்து வர வேண்டியவர் ஆனார்கள்.

அப்துல் முத்தலிப் அவர்கள் மிக்க அன்போடு தம் பேரரை வளர்த்து வந்தார்கள்.

## 2. தேர்ந்தெடுத்த சிற்றப்பா

தாயும் தந்தையுமற்ற நிலையில் பெருமானவர் கள், தம் பாட்டனாராகிய அப்துல் முத்தலிப் அவர் களிடம் வளர்ந்து வந்தார்கள். அப்துல் முத்தலிப் அவர் கள் மூப்படைந்து வந்ததால் நாளுக்கு நாள் அவர் களுடைய உடல் நிலை தளர்ந்து வந்தது. எனவே, அநாதைக் குழந்தையாகிய பெருமான் அவர்கள் தக்க

ஆதரவில் வளரத் தான் உயிருள்ள போதே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கருதினார் அன்புப் பாட்டனார்.

அப்துல் முத்தலிப் அவர்கள், தாம் அருமை மைந்தர்கள் அனைவரையும் ஒருநாள் அழைத்து இது குறித்து ஆலோசனை செய்தார்கள்.

முதலில் அபூலஹப் எனும் மைந்தர் குழந்தையை வளர்க்கும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொள்வதாக மனமுவந்து கூறினார். ஆயினும் பெருமானவர்களை அவரிடம் ஒப்படைக்கப் பாட்டனாரின் உள்ளம் இசையவில்லை.

"மகனே, நீ பணக்காரன். பணக்காரர்களுக்கே இயல்பாயுள்ள கல்மனம் உன்னிடம் இருக்கக் காண் கிறேன். கண்டிப்பான உன் இயல்பினால், தாய் தந்தையற்ற இக் குழந்தை கண்கலங்க நேரிடுமென அஞ்சுகின்றேன். ஆதலால் உன்னிடம் இப் பொறுப்பை ஒப்படைக்க நான் விரும்பவில்லை" என்று அம் முதியவர் கூறிவிட்டார்.

இரண்டாவதாக ஹஸ்ரத் ஹம்சா அவர்கள், பிள்ளையை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள உடன்பட்டார்கள். அவரிடம் பெருமானவர்களை ஒப் படைக்கவும் அவருடைய பாட்டனாருக்கு மனம் வர வில்லை.

"மகனே, உனக்குப் பிள்ளைகளே யில்லை, ஆகையால் பிள்ளையின் அருமையை நீ உணர மாட்

டாய்' ஆகவே, இந்த அநாதைக் குழந்தையை உன்னிடம் ஒப்படைக்க நான் நினைக்க வில்லை'' என்று கூறிவிட்டார் பெரியவர்.

அடுத்து ஹஸரத் அப்பாஸ் அவர்கள் முன்வந்த போது, அவரை நோக்கி அப்துல் முத்தலிப் இவ்வாறு கூறினார்.

''மகனே, உனக்குப் பிள்ளைகள் அதிகம். அவற்றை வளர்த்துப் பாதுகாக்கவே உனக்குச் சரியாக இருக்கும். அத்தோடு, இந்தப் பிள்ளையையும் சேர்த்துக் கொண்டால், நீ எப்படி இதைக் கவனித்து வளர்க்கப் போகிறாய்?'' என்று கேட்டு மறுத்து விட்டார்.

கடைசியாக, அபூதலிப் அவர்களின் முறை வந்தது. அவர் தன் தந்தையை நோக்கி, ''தந்தையே, நான் பெரிய பணக்காரனுமல்லன்; பிள்ளைகள் இல்லாதவனு மல்லன்; அதிகப் பிள்ளைகள் பெற்றவனு மல்லன். ஆகவே, இவனை வளர்க்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைக்க வேண்டுகிறேன்'' என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார்.

தன் உடன் பிறந்தார்களுக்குக் கூறிய பதிலையே தந்தையார் கூறிவிடுவாரோ என்ற பயம் அவர் உள்ளத்தில் இருந்தது. ஆனால் அப்துல் முத்தலிப் அவர்கள் அன்புடன் அவரை நோக்கி, ''மகனே, என் ஆசையை நிறைவேற்றத் தகுதியுடையவன் நீ என்

பதில் ஐயமில்லை. ஆயினும், குழந்தையின் கருத்தையும் அறிந்து கொள்வோம்'' என்று கூறிப் பெருமானவர்களை அழைத்தார்.

''கண்மணியே, எனக்கு வயது அதிகமாகி விட்டது. இன்னும் எத்தனை நாள் உயிருடன் இருப்பேன் என்று சொல்ல முடியாது. எனக்குப் பின் உன்னை வளர்க்கும் பொறுப்பை இவர்கள் ஏற்றுக் கொள்ள முன் வருகிறார்கள். இவர்களில் யாருடன் இருக்க உனக்கு விருப்பம்?'' என்று பெருமானை நோக்கிக் கேட்டார் அவர்.

பெருமானவர்கள் சிரித்துக்கொண்டே சென்று அபூதலிப் அவர்களின் மடியில் அமர்ந்து கொண்டார்கள்.

இக் காட்சியைக் கண்டதும் அப்துல் முத்தலிப் அவர்களின் கண்களில் நீர் ததும்பியது. தன் அருமை மகனை நோக்கி, ''அபூதாலிப், பாவமறியாத இக் குழந்தைக்குத் தந்தையின் அன்பு இப்படிப்பட்டதென்று தெரியாது. தாயையும் இவ்வளவு சிறுவயதிலேயே இழந்து விட்டது. ஒரு குறையும் வராமல் காப்பாற்றுவது உன் பொறுப்பு'' என்று கூறினார்கள்.

இந்த ஏற்பாடு நடந்த சில நாட்களுக்குப் பின்னர், அவர்கள் மன அமைதியுடன் தம் கண்களை மூடினார்கள்,

அபூதாலிப் அவர்கள் தம் தந்தைக்கு வாக்குக் கொடுத்த வண்ணமே, குழந்தையை என்றும் தம் முடன் வைத்துப் போற்றி வளர்த்து வந்தார்கள்.

# 3. துறவியாரின் எச்சரிக்கை

பெருமான் அவர்களை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அபூதாலிப் அவரைக் கல்வி பயிலச் செய்யவில்லை. பள்ளிக் கூடத்துக்கோ, அல்லது தனி ஆசிரியரிடமோ அனுப்பி வைக்கவில்லை. பெருமான வர்கள் அக்கால வழக்கப்படி ஆடு மேய்த்துக் கொண் டிருந்தார்கள்.

கல்வியறியாதவர் என்னும் கருத்துப் பட்ட 'உம்மி' என்ற அடை மொழியைச் சேர்த்தும் பெரு மானவர்களின் பெயரைக் குறிப்பிடுவதுண்டு.

ஒரு முறை அபூதாலிப் அவர்கள் வாணிகம் செய் வதற்காக ஷாம் நாட்டிற்குப் புறப்பட்டுப் போனார். அப் போது பெருமானும் உடன் வருவதாகக் கேட்டுக் கொள்ளவே அவர் தம்முடன் அழைத்துச் சென்றார்.

ஷாம் தேசத்தில் புஸ்ரா என்னும் நகருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே ஒரு மடத்தில் அவர்கள் தங்கினார்கள். அது ஒரு கிறித்தவத் துறவியாரின் மடம். அத் துறவியாரின் பெயர் பஹீரா என்பதாகும்.

பஹீரா சிறந்த கல்வியறிவுடையவர். பழம் வேதங்கள் அனைத்தும் அவருக்கு மனப்பாடம்.

அவர் ஒரு நாள் சிறு பையனாயிருந்த பெருமானை அழைத்துப் பேசிக் கொண்டிருந்தார். பெருமானவர்களின் முகப்பொலிவும், அறிவு நுட்பமும், இனிய மொழிகளும், குணச் சிறப்புக்களும் அவருக்கு ஒரு கருத்தை நினைவுபடுத்தின. பழம் வேதங்களில், உலகில் வெளியாகப் போகும் இறைவனுடைய திருத்தூதரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் மொழிகள் அவர் நினைவுக்கு வந்தன.

பஹீரா என்னும் அத்துறவி அபூதாலிப்பை அருகில் அழைத்து, ''ஐயா, இக் குழந்தையைக் கருத்தோடு கவனித்துக் கொள்ளுங்கள். அரேபிய நாட்டிற்கு ஒரு கதிரவன் போல் இது பிறந்திருக்கிறது. ஈசா நபியவர்களின் முன்னறிவிப்பின்படி இறைவனால் உலகுக்குக் கடைசியாக அனுப்பப்படுகிற நபி இவர் தாம். இவருக்கு யூதர்களால் இடையூறு வரக் கூடும். கவனித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார் அந்த நல்லவர். (ஈசா நபி—இயேசுநாதர்)

## 4. கலகம் தீர்த்த காவலர்

மக்காவிலே கஅபா ஒரு புனிதமான திருத்தலம். இத் திருத்தலத்தின் சுற்றுமதில்கள் பழுது பட்டிருந்தன. அதனால், வெள்ளப் பெருக்கு ஏற்படும்

போதெல்லாம் நீர் உட்புகுந்து கட்டிடத்தின் பிற பாகங்களையும் சேதப் படுத்தி வந்தது. மக்கா நகர் மக்கள், அக்கட்டிடத்தைப் புதுப் பிப்பதற்காகக் கூடிப் பேசினார்கள். கட்டிடத்தின் ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு கூட்டத்தார் கட்டிக் கொடுப்ப தென்று ஏற் பாடாயிற்று. இந்த ஏற்பாட்டின் பேரில் கட்டிட வேலை பல பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு நடந்து முடிந்தது.

முக்கியமான பிரகாரத்தில் இருந்த ஹஜர் அஸ்வத் என்னும் புனிதச் சின்னம் கட்டிட வேலைக்காகப் பெயர்த்தெடுக்கப் பட்டிருந்தது. அதை மீண்டும் நிலை நாட்ட வேண்டிய வேலை மீந்திருந்தது. விண் ணுலகச் சின்னமாகிய அதை நிலைநாட்டும் பேறு தமக்குக் கிடைக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் எதிர்பார்த்தார்கள். இதனால் பெரும் கலகமே ஏற் பட இருந்தது.

கலகம் ஏற்படாமல் தடுக்க ஒரு பெரியவர் முன் வந்தார். அவர், அப் புனிதச் சின்னத்தை அமைக்கும் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்ப தென்பதற்கு ஓர் ஆலோசனை கூறினார்.

புனிதத் திருத்தலமாகிய கஅபாவின் வாயில் வழி யாக மறு நாள் காலையில் முதன் முதல் யார் வரு வாரோ, அவர் கூறும் முடிவை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அப்பெரியவர் கூறினார். எல்லோரும் பெரியவர் கருத்தை ஒப்புக்கொண்டனர்.

மறு நாள் காலையில் பெருமான் முஹம்மது அவர் களே எல்லோருக்கும் முன்னால் அங்கு வந்திருந்தார். எல்லோருக்கும் இனியவராகிய அவரின் முடிவை ஏற்றுக்கொள்ள மக்கா நகர் மக்கள் அனைவரும் ஒப் புக் கொண்டனர்.

பெருமானவர்கள், திருச்சின்னத்தை நிலை நாட் டும் பணியை நிறைவேற்ற யாரும் மனங்கோணாத ஓர் அரிய வழியைக் கண்டு பிடித்துக் கூறினார்கள்.

அகலமான ஒருகனத்த துணி கொண்டு வருமாறு கூறி, அதில் ஹஜர் அஸ்வத்தைத் தூக்கி வைத்தார் கள். ஒவ்வொரு கூட்டத்தாரினின்றும் ஒவ்வொரு தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அத் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து துணியைப் பற்றித் தூக்கி, திருச்சின்னத்தை அதற்குரிய இடத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கச் செய்தார்கள். அதைத் தம் கையால் உரிய இடத்தில் நிலைநாட்டினார்கள்.

இச் செயலால் எல்லாக் கூட்டத்தினரும் மன நிறைவு கொண்டார்கள். பெருமானைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

## 5. வாழ்க்கைத் துணையாய் வாய்த்த பிராட்டியார்

பெருமானவர்களுக்கு அப்போது இருபத்தைந்து வயது நடந்து கொண்டிருந்தது. கல்வி கற்க

யில்லையே தவிர, அவர்களிடம் சிறந்த அறிவு நிரம்பி யிருந்தது. வாணிபத்திலும் நாட்டுப் பணியிலும் அவர் கள் சிறந்து விளங்கினார்கள்.

அக்காலத்தில் மக்காவிப் குறைஷி வம்சத்தில் செல்வம் நிறைந்த ஒரு சீமாட்டி இருந்தார்கள். அவர் கள் பெயர் கதீஜா என்பதாகும். அப்பெரு மாட்டியார் இருமுறை மணம் புரிந்து கொண்டும் விதவையாக இருந்தார்கள். எனவே, அவர்களுடைய வாணி பத்தைக் கவனிக்க நம்பிக்கையான மேலாள் ஒருவர் வேண்டியிருந்தது. பெரிய மனிதர் பலரை விசாரித்த தில், பெருமானவர்களைப் பற்றி நன்கு அறிந்து அவர்களைத் தம் வாணிபப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார்கள். பெருமானவர்களும் தம் சிறிய தந்தையார் அபூத்தாலிப்பின் ஆலோசனை யைக் கேட்டு, அவர்கள் அனுமதியின் பேரில் கதீஜாப் பெருமாட்டியிடம் வேலைக்குச் சேர்ந்தார்கள்.

கதீஜாப் பெருமாட்டியவர்கள், பெருமானுடைய குணச்சிறப்புக்களை நன்கறிந்து அவர்களையே தம் கணவராகப் பெற விரும்பினார்கள். அப்போது பெரு மாட்டிக்கு வயது நாற்பது.

பெருமாட்டியின் கருத்தையறிந்த பெருமானவர் கள் அபூதாலிப் அவர்களிடம் கூறிக் கலந்து திருமணம் செய்துகொள்ள இணங்கினார்கள்.

வயது வேற்றுமை அதிகமாக இருந்தாலும் அவர் களின் இல்லறவாழ்க்கை சிறப்பாக நடந்தது. இருவரும் ஒருவரையொருவர் நன்கறிந்து ஒன்றிப்பழகினார்கள்.

கதீஜாப் பெருமாட்டியவர்கள் நபிகள் நாயகத் திற்குத் தம் ஆயுள் உள்ளவரை உறுதுணையா யிருந்தார்.

# 6. அன்பின் அடிமை ஆனவர்

போரில் பிடிபட்டவர்களை அடிமை யாக்குவதும், அவ்வடிமைகளைச் சந்தைகளில் விற்பதும் அரபு நாட்டில் அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. இவ் வாறு ஒரு போர்க்கைதியாகப் பிடிபட்ட ஸைத் இப்னு ஹாரிஸ் என்பவர் சந்தை யொன்றில் அடிமையாக விற்கப்பட்டார். உக்கால் என்ற அச்சந்தைக்கு ஹக்கிம் இப்னு ஹிஸ்ஸாம் என்பவர் சென்றிருந்தார். அவர் ஸைதை விலைக்கு வாங்கினார். தம் அத்தையாகிய கதீஜா நாயகி அவர்களுக்கு அந்த அடிமையை அவர் பரிசாகக் கொடுத்தார். நாயகியாரோ தம் நாயகராகிய நாயகப் பெருமானிடம் அவ்வடிமையை ஒப்படைத் தார்.

பெருமானவர்கள், தம்மிடம் அடிமையாக ஒப் படைக்கப்பட்ட ஸைத் அவர்களை அழைத்து, ''ஐயா, உமக்கு விடுதலை யளிக்கிறேன். விருப்பம் இருந்தால் இங்கே என்னுடன் இருக்கலாம். இன்றேல் உம் நோக்கம் போல் எங்கு வேண்டுமானாலும் போக லாம். இனி நீர் யார்க்கும் அடிமையல்ல'' என்று கூறினார்,

அன்பு மிக்க பெருமானை விட்டு அகல ஸைத் அவர்களுக்கு மனமில்லை. பெருமானுடனேயே தங்கி விட்டார்.

தம் மகன் அடிமையாக்கப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட அவருடைய தந்தை ஹாரிஸ் என்பவர், அவரைத் தேடிக்கொண்டு புறப்பட்டு வந்தார். பணங் கொடுத்து விடுதலை செய்வதற்காக வந்த அவர், தம் மகன் முன்பே விடுதலை பெற்றுவிட்ட செய்தியறிந்து மிக்க உவப்படைந்தார்.

தன் மகனைக் கண்டு, தன்னுடன் வீட்டுக்கு வருமாறு அழைத்தார். ஆனால், ஸைத் தன் தந்தையுடன் செல்ல மறுத்து விட்டார்.

''தந்தையே, நான் இனி என்றென்றும் பெருமானின் அடிமையாகி விட்டேன். அவர்களுடைய உயர்ந்த குணங்களும் மிகுந்த அன்பும் என்னை ஆட் கொண்டு விட்டன. நான் விலைக்குப் பெற்ற அடிமையல்ல; அன்பின் அடிமை'' என்று கூறித் தன் தந்தையைத் திருப்பி யனுப்பி விட்டார்.

தன்பால் அன்பும் மதிப்பும் வைத்திருந்த ஸைத் அவர்களுக்குப் பெருமான் தன் அத்தை மகளையே திருமணம் செய்து கொடுத்து நல் வாழ்வு பெறச் செய்தார்.

# 7. தேவதூதரும் திரு ஒளித் தோற்றமும்

நபிபெருமான் அவர்கள் அக்காலத்தில் தனியே யிருந்து சிந்தனை செய்வதை வழக்கமாகக் கொண் டிருந்தார்கள். சில சமயம் 'ஹிரா' என்னும் மலைக் குகையில் போய் இருப்பார்கள். அங்குப் போகும் பொழுது இரண்டு மூன்று நாட்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு போய் இருப்பதும் உண்டு. ஒவ்வோர் ஆண்டிலும் ரம்ஸான் மாதம் முழுவதும் அக்குகையிலேயே சென்று இருந்து. இறைவணக்கத்திலும் நற்சிந்தனையிலும் காலங் கழிப் பார்கள்.

பெருமானவர்களுக்கு வயது நாற்பது ஆகியது' ரம்ஸான் மாதம் திங்கட்கிழமை யன்று இரவில் ஹிராக் குகையில் இறை வணக்கம் செய்து கொண்டிருந்தார் கள். அப்போது அவர்கள் எதிரே ஒரு பெருஞ்சோதி தோன்றியது. அச்சோதியின் இடையில் ஒரு திருவுருத் தோன்றி, ''முஹமது படிப்பீராக!'' என்று கூறியது.

''எனக்குப் படிக்கத் தெரியாதே'' என்றார் பெரு மான்,

''யாவற்றையும் படைத்த தலலவனாகிய இறைவன் திருப்பெயரைக் கூறிப் படிப்பீராக! அவன் சதைக் கட்டியினால் மனிதனைப் படைத்தான்! படிப் பீராக! உங்கள் நாயன் எதிர்பாராமல் கொடுப்பவன்

அவன் எழுதுகோலினால் மனிதனுக்குக் கற்றுக் கொடுத்தான். மனிதனுக்குத் தெரியாத பொருள்களை யெல்லாம் அவனே விளக்கி யருளினான்'' என்னும் கருத்துள்ள அரபி மொழிச் சொற்களை அவ்வானவர் கூறியருளினார்.

இம்மொழிகளைக் கேட்டதும் பெருமானவர் களுக்கு மயிர்க் கூச்செறிந்தது. மயக்கம் உண்டாயிற்று. மயக்கம் தெளிந்து எழுந்ததும் நடுக்கத்துடன் ஹிராக் குகையிலிருந்து புறப்பட்டு வீட்டிற்கு வந்து சேர்ந் தார். போர்வையை எடுத்து உடலை மூடிக் கொண்டு படுத்து விட்டார். நடுக்கங் குறைந்து சிறிது மன ஆறுதல் ஏற்பட்டவுடன் நடந்ததை யெல்லாம் தம் மனைவியாரான கதீஜாப் பெருமாட்டியிடம் கூறினார்.

கதீஜாப் பெருமாட்டியவர்கள் பல வகையாகப் பெருமானுக்கு ஆறுதல் கூறித் தேற்றினார்கள். நாயகி யார் தம் சிறிய தந்தையின் புதல்வரான வர்க்கா என்ப வரிடம் இச் செய்திகளைக் கூறினார். இவற்றைக் கேட்டவுடன் வர்க்கா பெரும் பரவசமடைந்தார்.

''புனிதம்! புனிதம்! மூசா நபியவர்களிடம் வெளியான தேவதூதரே முகம்மது அவர்களிடம் தோன்றி யிருக்கிறார். இவர் மக்களுக்கு ஒரு நபியாக விளங்குவார். அவரிடம் இச்செய்தியைக் கூறித் தைரிய மாக இருக்கச் சொல்லுங்கள்'' என்று சொல்லியனுப் பினார்,

வர்க்கா வேத ஆராய்ச்சி செய்தவர். அவ்வேதங்களின் மூலம், அரேபியாவில் ஒரு நபி தோன்றுவார் என்ற செய்தியை அறிந்து அதை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பெருமான் அவர்களை நேரில் சந்தித்தபோது; இறைவன் மீது ஆணையிட்டு "இம் மக்கள் கூட்டத்திற்கு ஆண்டவன் உம்மை நபியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான். இறைவனின் செய்திகளை அறிவிக்கும் தேவ தூதரே உம்மிடம் வந்தவர். மக்கள் உங்களைப் பொய்யன் என்று தூற்றுவார்கள். பெருந் தொல்லைகளை விளைவிப்பார்கள். உமக்கு எதிராகப் போர் புரிவார்கள். நாட்டை விட்டே துரத்துவார்கள். அப்படி நடக்கும் போது நான் உமக்காகப் போராடுவேன்" என்று கூறினார்.

பெருமான் அவர்களை இறைவனுடைய தூதர் என்று முதன் முதல் ஏற்றுக் கொண்டதும், சிலை வணக்கத்தைக் கைவிட்டு, ஒரு தெய்வக் கொள்கையை ஒப்புக்கொண்டு பின்பற்றியதும், முதலில் பெருமானுக்கு உறுதுணையாக இருந்ததும் கதீஜாப் பிராட்டியாரே யாவார்கள்.

பெருமானவர்களிடம் வெளியாகிய தேவ தூதர் ஜிப்ரீல் ஆவார். இத்தூதர் பின் பல முறைகள் அவ்வப்போது தோன்றித் தெய்வச் செய்திகளைப் பெருமானுக்கு அறிவிப்பார். பெருமானவர்கள் தமக்கு வெளியாக்கப்பட்ட தெய்வச் செய்திகளை முதலில் மிக நெருங்கியவர்களிடம் மட்டுமே

அறிவித்தார். பிறரிடம் அவர் இச்செய்திகளை அறிவித்த போது அவர்கள் நம்பாதது மட்டுமன்றி, எதிர்க்கவும் தொடங்கினர்.

# 8. சிறிய தந்தையின் சீற்றம்

நபி பெருமானின் சிற்றப்பா ஹம்ஸா பெரு வீரர். வேட்டையாடுவதில் விருப்ப முள்ளவர். விடியற் காலையில் வில்லும் அம்புமாய்ப் புறப்பட்டால், பகல் முழுவதும் வேட்டையாடி விட்டு அந்தி நேரத்தில் தான் வீடு திரும்புவார். அவர் பெருமானவர்கள் மீது மிக்க அன்புடையவராயிருந்தும் புனித மார்க்கத்தில் அதுவரை சேரவில்லை.

ஒரு நாள் அவர் வேட்டையாடிவிட்டுத் திரும்பும் வழியில் மனந்துடிக்கும் ஒரு செய்தியைக் கேள்விப் பட்டார்.

அபூஜாஹில் என்பவன் பெருமான் அவர்களின் உறவினன். பெருமான் அவர்களைப் பெற்றெடுத்த குறைஷி இனத்தில் ஒருபெருந் தலைவனாகக் கருதப் பெற்றவன். அவன்பெருவீரன் ஆயினும் மிகக் கொடிய வன். வீரர்களுக்குரிய சிறந்த பண்பாடுகள் அவனிடம் கிடையா. பெருமானவர்கள் இறைவனின் தூதராகப் பிறந்துள்ளார்கள் என்ற கருத்தை அவன் ஒப்புக் கொள்ள வில்லை. எனவே இசுலாத்தின் பகைவனானான். இசுலாத்தை ஒழிப்பதே தன்கடனெனக் கருதிச் செயலாற்றி வந்தான் அத் தீயவன்.

பெருமானவர்களைக் கண்டாலே அவனுக்கு ஆத்திரம் பொங்கி எழும். ஒரு நாள் அவன் நபிநாயகம் அவர்களின். தலையைக் குறி பார்த்துக் கல்லெறிந்தான். அதனால் பெரிய காயம் உண்டாயிற்று. பெருமானவர்கள் பெருந்துன்பத்துக் காளானார்கள். வேட்டைக்குச் சென்று திரும்பி வந்த ஹம்ஸா அவர்கள் இச் செய்தியைக் கேட்டதும் பதறிப் போனார்கள். உடனே பெருஞ் சினத்துடன் அபூஜாஹில் என்ற அத்தீயவனைத் தேடிச் சென்றார்கள். நண்பர்களுடன் உல்லாசமாய் விளையாடிக் கொண்டிருந்த அவன் தலையைக் குறி பார்த்து ஓர் அம்பெய்தார்கள். அந்த அம்பு அவன் தலையிற் பாய்ந்து பெரிய காயத்தை ஏற்படுத்தியது. அதைக் கண்ட பிறகுதான் மன அமைதியடைந்து ஹம்ஸா அவர்கள் திரும்பினார்கள்.

நேராகக் கஅபா என்னும் புனிதத் தலத்திற்குச் சென்று வலம் வந்து, பின் பெருமானிடம் திரும்பி வந்தார்கள்.

''முஹம்மது! வருத்தம் வேண்டாம். உன் பகைவனைப் பழி வாங்கி விட்டேன்'' என்று நடந்த செய்திகளை விளக்கிக் கூறினார்கள்.

அது கேட்ட பெருமானவர்கள் தன் சிற்றப்பாவை நோக்கி, ''என் அருமைச் சிறிய தந்தையே, இஸ்லாத்தின் பகைவரைப் பழிவாங்க வேண்டும் என்பது என் கருத்தன்று. அவர்களைத் துன்புறுத்துவதால் பயன்

ஒன்றுமில்லை. இஸ்லாத்தின் உண்மையை உணர்ந்து தாங்கள் இப் புனித மார்க்கத்தில் சேர்வீர்களானால் அதுவே எனக்குப் பெருமகிழ்ச்சி தரும்'' என்று கூறி னார்கள்.

இவ்வினிய சொற்கள் ஹஸரத் ஹம்ஸா அவர் களின் இதயத்தில் ஒரு சிறந்த எழுச்சியைத் தோற்று வித்தன. அவர்கள் அன்றே இஸ்லாத்தைத் தழுவி னார்கள்.

## 9. மக்கா மலையை முட்டிய பேரொலி

பெருமானைப் பிறவிப் பகைவராகக் கருதிய அபூ ஜாஹில் என்பவன் ஒரு நாள் குறைஷி இனத்துத் தலைவர்கள் அனைவரையும் கூட்டினான். அவர்கள் அனைவருக்கும் வீர உணர்ச்சி வரும்படியாகப் பேசி னான்.

''இளைஞர்களே, உங்கள் மதமும் கடவுள்களும் ஒரு தனி மனிதனால் கேவலப் படுத்தப்படுவதைப் பார்த்துக் கொண்டு உங்களால் உயிரோடு இருக்க முடி கிறதா? வீரமற்ற கோழைகளா? ஏன் சும்மாயிருக்கிறீர் கள்?'' என்று கேட்டதோடு அவன் நின்று விட வில்லை. யார் நபிபெருமான் அவர்களின் தலையை வெட்டிக் கொண்டு வருகிறானோ, அவனுக்குச் சமூக சேவைப் பரிசாக நூறு ஒட்டகங்கள் கொடுப்பதாகவும் ஆசை யூட்டினான்.

தம் இதயமே வீரத்தின் இருப்பிடமாகக் கொண்ட உமர் இப்னு சத்தாப் என்பவர் இச் சொற்களைக் கேட்டு எழுச்சி பெற்றார். அவர் அபூஜாஹிலை நோக்கி, ''நான் இவ் வேலையை முடித்து வருகிறேன். ஆனால், நீர் சொன்னபடி நடப்பதாகச் சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்'' என்று கேட்டார். உடனே அபூஜாஹில் அவரைக் கஅபாவிற்கு அழைத்துக் கொண்டு சென்றான். அங்குள்ள ஹுபல் என்னும் உருவச் சிலையின் முன் நின்று தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதாகச் சத்தியம் செய்தான். உமர் இப்னுகத்தாப்பும் தம் பகைவரைக் கொல்லும் வரை எவ்விதமான இன்பத்தையும் நினைத்துப் பார்ப்பதில்லை என்று உறுதி பூண்டார்.

இஸ்லாத்தில் சேர்ந்தவர்களைத் துன்புறுத்துவதே தம் இன்பமாகக் கொண்டிருந்த உமர் இவ்வாறு உறுதி பூண்டபின் உருவிய வாளுடன் புறப்பட்டார்.

நபிபெருமானைத் தேடிப் புறப்பட்ட உமரை நண்பர் ஒருவர் வழியில் சந்தித்தார். உருவிய வாளுடன் கருவிய நெஞ்சுடன் உமர் விரைந்து செல்லும் காரணத்தைக் கேட்டறிந்த அந்த நண்பர், உமரைக் கேலி செய்தார்.

''உமது குடும்பத்திலேயே இஸ்லாம் புகுந்து விட்டது. உம் சகோதரியும் மைத்துனரும் இஸ்லாத்தில் சேர்ந்து விட்டார்கள். வெட்கமிருந்தால் முதலில் வீட்டில் உள்ளவர்களைத் தீர்த்துக் கட்டி விட்டுப்

பிறகு மற்றவரைப் பற்றிச் சிந்தியும்!'' என்று எள்ளி நகையாடினார் அவர்.

உமர் நேராகத் தம் சகோதரியின் வீடு சென்றார். கதவு தாளிடப்பட்டிருந்தது. உள்ளே அவர் சகோதரியும் மைத்துனரும் திருக்குர்ஆனை ஓதிக்கொண்டிருந்தனர். உமர் கதவைத் தட்டினார். அவர் குரல் காதில் விழுந்தவுடன், அவர் சகோதரி திருக்குர்ஆன் எழுதியிருந்த தாள்களை ஒளித்து வைத்துவிட்டு வந்து கதவைத் திறந்தார்.

உள் நுழைந்த உமர் கடுங்கோபத்துடன் ''இப்போது சற்று முன் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? என் காதில் விழுந்தது என்ன?'' என்று கேட்டார்.

சினம் பொங்கும் அவர் விழிகளைக் கண்டு அஞ்சிய அம்மையார் ''ஒன்றும் இல்லை'' என்று கூறினார்கள் ''இல்லை, நீங்கள் மதம் மாறிவிட்டீர்கள்!'' என்று சீறிக் கொண்டே தம் மைத்துனரை அடிக்க முற்பட்டார் உமர். கணவனைக் காப்பாற்ற வந்த அவர் சகோதரி அவ்வடியை ஏற்றுக் கொண்டார். அடி பலமாக விழுந்ததால் அப்பெண்மணிக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது.

அப்படியிருந்தும், சற்றும் கலங்காமல், ''உமர், என்ன செய்தாலும் இஸ்லாம் எங்கள் மனத்தை விட்டு அகலாது'' என்று உறுதியுடன் கூறினார். காயத்தின் வழியே குருதிபாய்ந்தோடும் அந்நிலையிலும்

கலங்கா உறுதியுடன் வெளிப்பட்ட இச் சொற்கள் உமரின் மனத்தைக் கரையச் செய்து விட்டன. உமர் உடன் பிறந்தாளை நோக்கிப் பரிவுடன், ''நீங்கள் ஓதிய வாசகங்களை எனக்குக் காட்டுங்கள்'' என்று கூறினார்.

ஒளித்து வைத்த தாள்களை எடுத்து வந்து காட்டினார் அம்மையார்.

அவற்றை எடுத்துப் படித்துப் பார்த்த உமர் அச் சொற்றொடர்களில் படிந்துள்ள உண்மைகளுக்கு ஆட்பட்டார். புது மனிதரானார். புத்துணர்ச்சியுடன் நபி பெருமான் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்றார்.

நபிபெருமான் அவர்கள் அப்போது அர்க்கம் என்ற நண்பரின் வீட்டில் நம்பிக்கை யுள்ளவர்களுடன் இருந்து தொழுகை நடத்திக் கொண்டிருந்தார்.

அபூஜாஹில்லிடம் உமர் உறுதியுடன் புறப்பட்ட செய்தி அங்கிருந்த முஸ்லிம்களுக்குத் தெரிந்திருந்தது. எனவே, உமர் வந்து கதவைத் தட்டியபோது, அதைத் திறக்க யாரும் முன்வர வில்லை. அச்சத்தால் பேசாதிருந்த அவர்களை நோக்கி ஹஸரத் ஹம்ஸா அவர்கள் ''அஞ்ச வேண்டாம். அவரை நான் கவனித்துக் கொள்கிறேன். ஏதேனும் தீமை நிகழுமாயின் அவர் கை வாளாலேயே அவர் தலையைக் கொய்து விடுகிறேன். சென்று கதவைத் திறந்து விடுங்கள்'' என்று கூறினார்,

கதவைத் திறந்தவுடன் உள்ளே நுழைந்த உமரை எதிர்சென்று கண்டார் நபிநாயகம். அவருடைய சட்டை நுனியைப் பற்றிக் கொண்டு, ''உமர், என்ன நோக்கத்தோடு இங்கு வந்தீர்?'' என்று கேட்டார்.

ஏற்கனவே மனம் மாறிப் போயிருந்த உமர் அவர்கள் வணக்கத்துடன் இனிய குரலில் ''இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவே இங்கு வந்தேன்!'' என்று கூறினார்கள்.

''ஆண்டவன் மிகப் பெரியவன்'' என்ற திருமொழி நபிநாயகப் பெருமானின் திருவாயிலிருந்து வெளிப்பட்டது. வியப்பும் திகைப்பும் களிப்பும் ஒருங்கே கொண்ட அங்கிருந்த முஸ்லிம்கள் அனைவரும் அதே திருவாசகத்தை உரத்துக் கூவினர். அந்த ஒலி மக்கா மலையிலே சென்று முட்டி எதிரொலித்தது.

அதுவரை மறைவான இடங்களிலே கூடித் தொழுகை நடத்தி வந்த முஸ்லிம்கள், உமர் தங்கள் மார்க்கத்தில் சேர்ந்த பின், அச்சம் நீங்கி கஅபாவிலேயே சென்று தொழுகை நடத்தத் தொடங்கினார்கள்.

## 10. காதில் விழுந்த வேத வாசகம்

மக்காவுக்கு ஒரு முறை வெளியூரிலிருந்து ஒரு பெரியவர் வந்தார், அவர் 'தவுஸ்' என்றும் பெரிய குடும்பத்தின் வழியில் வந்த பெருமை யுடையவர்,

மக்காவிலிருந்த குறைஷிக் குலத்துத் தலைவர்கள் எல்லாரும் சென்று அவரை வரவேற்று அழைத்து வந்தனர். அவருக்கு ஆடம்பரமான உபசாரங்கள் நடந்தன. அவர் மக்காவாசிகளுடன் பேசிக் கொண்டிருக்கும் போது நபிநாயகம் அவர்களைப் பற்றிப் பேச்சு வந்தது.

பெருமானைப் பற்றி நிந்தனையும் பழியுமே பேசிய மக்கா வாசிகள், துபைல் இப்னு அம்ரு என்ற அந்தப் பெரியவரிடம் வேறு ஒரு செய்தியும் கூறினர். பெருமானிடம் ஒரு முறை பேசியவர்கள், ஏதோ மந்திர சக்தியால் ஈர்க்கப்பட்டு தாய் தந்தையரைக் கூட மதிக்காத பாதகர்களாகி விடுகின்றனர் என்று கூறினர்.

குறைஷிகள் கூறிய குற்றச் சாட்டுகளையெல்லாம் கேட்டறிந்த துபைல் என்பவர் பெருமானிடம் மிகுந்த வெறுப்புக் கொண்டார். அவர் முகத்தைப் பார்க்கவும் அவர் பேச்சைக் கேட்கவும் விரும்பாதவராயினார். நாயகமவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் வழியாக அவர் போக நேரிட்டால், முன்னெச்சரிக்கை யாகக் காதில் பஞ்சு வைத்துக் கொண்டு போவது வழக்கம்.

ஒரு நாள் துபைல் சொற்பொழிவு நடந்து கொண்டிருந்த பாதையாய்ச் சென்றார். அன்று நாயகத்தின் குரல் இஸ்லாத்தின் முழக்கம்போல் பெரிதாக ஒலித்துக் கொண்டிருந்தது. துபைல் பஞ்சு வைத்திருந்தார்.

ஆனால் அது காதில் இல்லை. மடியில் இருந்தது. மடியில் இருந்த பஞ்சை எடுத்துக் காதில் வைப்பதற்குள் வேத வாசகங்கள் அவர் செவியில் விழுந்து விட்டன.

மனித இனத்தின் நன்மைக்காக இறைவனால் மொழியப் பட்ட அத்திரு வாசகங்களை ஒரு முறை கேட்ட செவிகளை மீண்டும் மூட மனம் வருமோ! கையில் எடுத்த பஞ்சைக் காதில் வைக்க மறந்தார் துபைல்! அவர் மெய்யெல்லாம் ஒரு புளகாங்கித உணர்ச்சி ஏற்பட்டது. சொற்பொழிவு முழுவதையும் விருப்பத்தோடு கேட்டுக் கொண்டு நின்றார்.

பெருமானவர்கள் சொற்பொழிவு முடிந்து வீடு திரும்பிய போது, தாய்ப்பசுவைத் தொடரும் கன்றைப் போல துபைலும் அவர்களைத் தொடர்ந்து சென்றார். முதலில் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த நாயகமவர்கள், யாரோ கதவைத் தட்டும் ஒலி கேட்டுக் கதவைத் திறந்து விட்டார்கள்.

பெருமதிப்புக்குரிய செல்வந்தராகிய துபைல், பெருமானவர்களின் திருவடியில் விழுந்து கண்ணீர் விட்டு ''நான் தங்கள் அடியார்க்கு அடியான்'' என்று மனங்கசிந்து கூறினார்கள்.

துபைல் என்ற இப்பெரியவர் தாம் சேர்ந்தது மட்டுமன்றி வேறு பலரையும் இஸ்லாத்தில் சேரத் தூண்டிய பெருமை மிக்கவராவார்,

# 11. இருட்டுக் குகையில் இறைவனும் இருந்தான்

பெருமானவர்கள் நபியாகிப் பதின்மூன்றாம் ஆண்டு தொடங்கியது. இறைவன் அவ்வாண்டில் மதினாவிற்குப் போகும்படி கட்டளை பிறப்பித்தான். இக் கட்டளை பிறந்ததும், பெருமான் அவர்கள் ஹஸரத் அபூபக்கர் அவர்களின் வீட்டுக்குச் சென்று செய்தியை அறிவித்தார்கள். அவரும் பெருமானுடன் வருவதாகக் கேட்டுக் கொண்டார். நபி அவர்களும் சம்மதித்தார்கள்.

இந்நிகழ்ச்சி நடந்த இரு நாட்களுக்குப் பின்னர், அபூஜாஹில்லின் யோசனைப்படி அரபியர்கள், பெருமானைக் கொல்வற்காக இரவில் அவர்கள் வீட்டைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அரபிகளிடையே ஒரு பழக்கம் இருந்தது. வீரர்கள் பெண்கள் வசிக்கும் வீடுகளுக்குள்ளே புகுந்து கலகம் விளைப்பதில்லை. எனவே, பெருமானவர்கள் வீட்டை விட்டு வெளியில் வரட்டும் என்று காத்திருந்தனர்.

பெருமான் தம் உயிருக்காக அஞ்சவில்லை. ஆனால், பெரும்பாலோர் நம்பிக் கொடுத்த பொருள்கள் அவர்களிடம் இருந்தன. அவற்றை யெல்லாம் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று கருதினார்கள். அதற்காக ஹஸரத் அலியவர்களைத் தம் வீட்டில்

இருக்கச் செய்து அவர்கள் மட்டும் இரவில் வெளியேறி னார்கள். அவர்கள் வெளியேறிய போது இறைவன் அருளால் வெளியில் காத்திருந்தவீரர்கள் கண்களுக்குத் தென்பட வில்லை. வீட்டை விட்டு வெளியேறிய பெரு மான் ஹஸரத் அபூபக்கர் வீட்டுக்குச் சென்றார்கள்.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டு மூன்று கல் தொலைவில் உள்ள தௌர் என்னும் மலைக் குகையில் தங்கினார்கள். அக் குகைக்குள் மூன்று நாள் வரை தங்கினார்கள்.

பெருமான் வீட்டைச் சூழ்ந்திருந்த அரபியர்கள் பொழுது விடிந்த பின், வீட்டில் பெருமான் இல்லாதது கண்டு ஏமாற்றமும் ஆத்திரமும் அடைந்தனர். எவ்வா றேனும் கண்டு பிடித்துக் கொன்று விடுவது என்ற உறுதியுடன் எல்லாத் திசைகளிலும் புறப்பட்டுச் சென்றனர்.

பெருமானையோ, ஹஸரத் அபூபக்கரையோ பிடித்துக் கொடுப்பவர்களுக்கு நூறு ஒட்டகங்கள் பரி சாகக் கொடுக்கப்படும் என்று விளம்பரப் படுத்தினார் கள். இதனால் பரிசுக்கு ஆசைப்பட்டுப் பலர் பெரு மானைத் தேடத் தொடங்கினார்கள்.

அத் தீயவர்களில் சிலர் தௌர் மலைப்பக்கமாக வும் சென்றனர். அம்மலைக் குகையின் வாயிலை அணுகிய அவர்கள், பெருமான் அவர்கள் குகைக்குள் ஒளிந்திருக்கக் கூடும் என்று எண்ணினார்கள்,

வெளியில் ஆளரவங் கேட்ட ஹஸரத் அபூபக்கர் அவர்கள், ‘‘இங்கே நாம் இருவர் மட்டுமே இருக்கிறோம். அவர்கள் நம்மைக் கண்டால் கொன்று போட்டு விடுவார்கள்’’ என்று கூறினார். ஆனால், பெருமானோ, ‘‘பயப்படாதீர்! நம்மோடு ஆண்டவனும் இருக்கிறான். அவன் நம்மைக் காப்பாற்றுவான்’’ என்று ஆறுதல் கூறினார்கள்.

உண்மையில் பகைவர்கள் குகை வாயிலுக்கு வந்த போது, வாயிலின் குறுக்கே ஒரு சிலந்திப் பூச்சி வலை கட்டியிருந்ததைக் கண்டார்கள், மனிதர்கள் குகைக்குள்ளே யிருந்தால், சிலந்திப் பூச்சியின் வலையைக் கலைக்காமல் உள்ளே போயிருக்க முடியாது என்று அவர்கள் எண்ணினார்கள். மேலும் குகைக்கு நேர் எதிரில் தாழ்ந்திருந்த ஒரு மரக் கிளையில் புறாக் கூடும், அதில் முட்டைகளும் இருந்தன. இக்காட்சிகளைக் கண்டு அவர்கள் அந்த இருட்டுக் குகைக்குள் நுழைவது வீண் வேலை யென்று கருதித் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

## 12. விடுதலையின் விலை கல்வி

பத்ரு என்ற இடத்தில் குறைஷி இனத்தவர்கள் முஸ்லிம்களை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். ஆயிரம் போர் வீரர்களும் நூறு குதிரை வீரர்களும் அடங்கிய குறைஷிப் படையை இரண்டு குதிரை வீரர்கள் உட்பட முந்நூற்றுப் பதின் மூன்று பேரேயுடைய முஸ்லிம் படையினர் தோற்கடித்து வெற்றி பெற்றனர்.

அந்தப் போரில் தோற்றுப் பிடிபட்டு அடிமை யான கைதிகளைப் பெருமானவர்கள் நடத்தியது போல் பெருந்தன்மையாக வேறு யாரும் நடத்தி யிருக்க முடியாது. சஹாபாக்கள் என்ற தம் தோழர் களிடம் ஆளுக்கு இரண்டு அல்லது நான்கு கைதிகள் வீதம் ஒப்படைத்து நல்ல விதமாய் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். நாயகத்தின் சொற்களை மதித்து நடக்கும் அந்த நல்லன்பர்கள், தம்மிடம் இருந்த ரொட்டியை யெல்லாம் கைதிகளுக்கு சாப்பிடக் கொடுத்து, தாங்கள் பேரீச்சம் பழத்தைத் தின்று வெறும் தண்ணீரைக் குடித்து விட்டு இருந்தார் கள். கைதிகளுக்கு உடுக்க உடையில்லாமல் இருந்த போது அந்த சஹாபாக்கள் தங்கள் ஆடைகளை எடுத்துக் கொடுத்தார்கள்.

கைதிகளை என்ன செய்வது என்ற பிரச்சினை வந்த போது பெருமானவர்கள் தம் தோழர்களுடன் ஆலோசனை செய்தார்கள்.

பகைவர்கள் யாவரும் பழகியவர்களாகவும் உற வினராகவும் இருப்பதால், ஏதாவது தொகை பெற்றுக் கொண்டு விடுவித்து விடலாம் என்று ஹஸரத் அபூ பக்கர் அவர்கள் கூறினார்கள். ஆனால் வீரமே மூச்சாகக் கொண்ட ஹஸரத் உமர் அவர்களோ, பகை யென்று வந்தபின், உறவினன் அயலவன் என்று பார்த்துக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை; உற வென்று பாராமல் அவர்களைக் கொன்று விட வேண்டும் என்று கூறினார்கள்.

நபிபெருமானுக்கு இந்த வன்முறைச் செயல் பிடிக்க வில்லை. ஹஸ்ரத் அபூபக்கர் அவர்கள் கூறிய அருள் வழியே ஒப்பத் தக்கதாயிருந்தது. எனவே, ஒவ்வொரு கைதியும், நாலாயிரம் திர்ஹம் கொடுத்து விட்டு விடுதலை பெறலாம் என்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறே பலர் பணம் கொடுத்து விடுதலையானார் கள். பணம் கொடுக்கும் வசதியற்ற படித்த மனிதர்கள் ஆளுக்குப் பத்துப் பிள்ளைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து விடுதலை பெறலாம் என்று ஒரு புது நிபந்தனை விதிக்கப்பட்டது. தாம் கல்லாதவரா யிருப்பினும், கல்வியின் அருமையை எவ்வளவு பெரி தாக மதித்தார்கள் பெருமானார் என்பதற்கு இது நல்ல சான்றாகும்.

பணவசதியும் இன்றிப் படிப்பறிவும் இன்றித் தம் நிலை யாதாமோ என்று கலங்கிய கைதிகளை அவர் களிடமிருந்து எதுவும் பெறாமலே விடுதலை செய்து விடுமாறு பெருமானவர்கள் கட்டளையிட்ட வண்ணம் அனைவரும் விடுதலை பெற்றார்கள்.

## 13. உள்ளந் தளராத வீரர்

ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டில் மதினாவில் இருந்த முஸ்லிம்களைத் தாக்குவதற்காக மக்காவாசிகள் ஆயத் தம் செய்தார்கள். ஒற்றர்கள் மூலமாக இச் செய்தியை அறிந்த பெருமானவர்கள் முஸ்லிம்களைப் போருக்கு ஆயத்தம் செய்தார்கள். அப்போது இஸ்லாத்திற்காகப் போராட நின்ற வீரர்கள் எழுநூறு பேர் தான்.

படை வீரர்கள் மதினா நகரின் எல்லைக்கு வெளியே வந்ததும், அவர்களை ஓரிடத்தில் நிறுத்திச் சரிபார்த்துக் கொண்டு வந்தார் பெருமான். உரிய வயது வராத சிறுவர்களையும், மிக முதிர்ந்த வயதுடையவர்களையும் ஊருக்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளை யிட்டார்கள். ஆனால், நம்பிக்கையும் உணர்ச்சியும்அதிகம் உள்ள ஓர் இளைஞன் அவ்வாறு போக மனமற்றிருந்தான். அவன் இதற்காக ஒரு தந்திரம் செய்தான். தன்னைப் பரிசோதிக்க நேரிட்ட போது, பெருவிரல் நுனியில் எம்பிநின்று கொண்டு, தான் உயர முள்ளவன் எள்று காட்டினான். அவன் தந்திரம் பலித்தது, அவனைப் பெரிய மனிதனாகக் கருதிப் படையில் லவத்துக் கொண்டார்கள். அச்சிறுவன் பெயர் ராபிஅ-பின் கதீஜ்.

அடுத்து, அவனினும் வயது குறைந்த ஸம்ரா என்ற சிறுவனைத் திரும்பிப் போகச் சொன்ன போது, அவன் மறுத்து விட்டான். தான் ராபிஅவை மல்யுத்தத்தில் தோற்கடிக்கும் வலிமையுடையவனென்றும், அப்படியிருக்க அவனே படையில் சேர அனுமதியுள்ள போது தான் ஏன் சேரக் கூடாதென்றும் கேட்டான் ஸம்ரா. உடனே இருவரையும் மல்யுத்தம் செய்யவிட்டார்கள். அதில் ஸம்ரா வென்றான். ஆகவே, அவனும் போர்ப்படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டான்.

வயது முதிர்ந்து உடல் தளர்ந்த ஒரு முதியவர், மதினாவுக்குத் திரும்பிப்போக மறுத்து விட்டார். அதற்கு அவர் கூறிய காரணம் இது: ''நான் கப்ருக் குள் (புனித குழிக்குள்) காலைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கிறேன். (விரைவில் இறந்து விடுவேன்.) இந்த நிலையில் நபியவர்களைப் பாதுகாப்பதற்காகப் போர் செய்து இறப்பதையே நான் பெரிதும் விரும்பு கிறேன்'' என்றார் அம் முதியவர்.

உண்மைப் பற்றுதலும் நம்பிக்கையும் உணர்ச்சி யும் கொண்ட இந்தப் படை போரில் வெல்லும் என் பதில் ஐயம் உண்டோ?

## 14. இணையற்ற வீரர் இப்னுநலர்

உஹுத் சண்டையின் போது நிகழ்ந்தது இது. போர்க்களம் ஒரே குழப்பமாயிருந்தது. அவ்வளவு தீவிரமாகப் போர் நடந்து கொண்டிருந்தது. பெரு மானவர்களைப்போல் முகச்சாயல் உடைய ஒருவரைக் கொன்று விட்டு, பெருமானைக் கொன்று விட்டதாக முழங்கினான் ஒரு குறைஷி.

இந்தக் கூக்குரலைக் கேட்டவுடன் முஸ்லிம்கள் பெரும் தளர்ச்சி யடைந்தார்கள். அவர்களுடைய ஊக்கம் குறைந்து விட்டது. ஆயினும் ஆற்றல் மிக்க வீரர்கள் சற்றும் தளர்ச்சியடையாமல் தொடர்ந்து எதிரிகளைச் சாய்த்துக் கொண்டிருந்தார்கள். எதிரிப்

படைகளைச் சாய்த்தவாறு வாளை வீசிக் கொண்டே முன்னேறிச் சென்ற இப்னு நலர் என்ற வீரர் வழியில் ஹஸரத் உமர் அவர்களைக் காண நேர்ந்தது.

மனத் தளர்ச்சியோடு, கை ஆயுதத்தை வீசியெறிந்து விட்டு நின்று கொண்டிருந்த ஹஸரத் உமர் அவர்களை நோக்கி, "இங்கே ஏன் சும்மா யிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் இப்னு நலர்.

"நபிபெருமான் இறந்து விட்டார்களே இனிச் சண்டை செய்து என்ன பயன்?" என்று கேட்டார் ஹஸரத் உமர்.

அதை கேட்ட இப்னுநலர் "நபிபெருமான் இறந்த பின் நாம் உயிருடனிருந்து என்ன செய்யப் போகிறோம்?" என்று கேட்டுக் கொண்டே எதிரிப் படையினுள் புகுந்தார். வீராவேசமாகப் போரிட்டுப் பல எதிரிகளைக் கொன்று ஒழித்த பின் அவர் உயிர் துறந்தார்.

போர் முடிந்தபின் அந்த வீரரின் உடலைப் பார்த்தபோது எளிதில் அடையாளங் கண்டுபிடிக்க முடியாத வண்ணம், உடல் முழுவதும் வெட்டுக் காயங்களும் குத்துக் காயங்களும் மலிந்துகாணப்பட்டன. இடைவெளியில்லாமல் புண்மயமாய்க் காட்சியளித்த அவருடைய உடலை, ஒரு விரலின் அடையாளத்தைக் கொண்டே இன்னார் என்று தெரிந்து கொண்டாராம் அவருடைய சகோதரி.

# 15. "ஆளானோம் தங்களுக்கே ஐயா!"

பெருமானவர்களின் மீது தொடக்க காலத்து முஸ்லிம்கள் எவ்வளவு உண்மையான அன்பு கொண்டிருந்தார்கள் என்பதைக் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விளக்கும். உஹுத் சண்டை நடந்து கொண்டிருந்தது. எதிரிகளின் தாக்குதல் பலமாக இருந்தது. முஸ்லிம்களின் தரப்பில் உயிர்ச்சேதம் அதிகமாயிருந்தது. இடையில் பெருமான் அவர்கள் போரில் கொல்லப்பட்டு விட்டதாகப் புரளி வேறு கிளப்பிவிடப்பட்டிருந்தது. இதனால், சில முஸ்லிம்கள் போர்க்களத்திலிருந்து பின்வாங்கி மதினாவிற்குத் திரும்பினர்.

அப்படித் திரும்பி வந்தவர்களை நோக்கி, வீட்டில் இருந்த பெண்கள், நபிபெருமானை விட்டு விட்டுத் திரும்பி வந்ததற்காக இடித்துரைத்தார்கள். அதுமட்டுமல்லாமல் பெரும்பாலான முஸ்லிம் பெண்கள், பெருமானவர்களின் நிலையை நேரில் அறிந்து கொள்வதற்காகப் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள்.

பெருமானவர்களின் நலத்தை விசாரித்துக் கொண்டு சென்ற பெண்களிலே அன்சாரி குலத்தைச் சேர்ந்தவள் ஒருத்தி. போர்க் களத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த சிலர் அவளை வழியில் சந்தித்தனர். அவளைக் கண்டவுடன் அவர்கள் துயரத்துடன், "அம்மா, உன் தந்தை சண்டையில் உயிர்

துறந்து விட்டார்'' என்று கூறினார்கள். அதைக் கேட்ட அவள் தன் துயரத்தை அடக்கிக் கொண்டு, ''நாம் அனைவரும் ஆண்டவனுக்காகவே யிருக்கி றோம், அவனிடமே மீண்டும் போய்ச் சேருவோம்'' என்று கூறினாள். தொடர்ந்து, ''பெருமான் அவர்கள் எப்படியிருக்கிறார்கள்?'' என்று கேட்டாள்.

அந்த மனிதர்கள் அதற்கு மறுமொழி கூறாமல், ''அம்மா, உன் சகோதரரும் போரில் இறந்து விட் டாரே!'' என்று கூறினார்கள். அதைக் கேட்ட பின்ன ரும் அவள் தன் துன்பத்தைச் சற்றேனும் வெளிக் காட்டாமல், ''நாம் அனைவரும் ஆண்டவனுக் காகவேயிருக்கிறோம். அவனிடமே மீண்டும் போய்ச் சேருவோம்'' என்று கூறினாள். தொடர்ந்து, ''பெரு மான் அவர்கள் எப்படி யிருக்கிறார்கள்?'' என்று கேட்டாள்.

அந்த மனிதர்கள் அதற்குப் பதில் உரைக்காமல், ''அம்மா, உன் கணவரும் கொல்லப்பட்டுவிட்டாரே!'' என்று கூறினார்கள். அதைக் கேட்ட அந்தப் பெண் ணால் தன் துயரத்தை அடக்கிக் கொள்ள முடிய வில்லை. இருப்பினும் பெருமூச்சு விட்டுக் கொண்டே, ''நாம் அனைவரும் அல்லாவுக்காகவே இருக்கிறோம். அவனிடமே திரும்பிச் செல்வோம்'' என்று கூறினாள். மறவாமல், ''பெருமானவர்கள் எப்படியிருக்கிறார் கள்?'' என்று கேட்டார்.

''பெருமான் அவர்கள் நலமாக இருக்கிறார்கள்'' என்று அவர்கள் சொன்ன பின், அவளுக்கு

இருந்த துயரமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போயிற்று. அமைதி நிறைந்த உள்ளத்தோடும், பெருமானைக் காணப் போகிறோம் என்ற ஆவலோடும் அவள் களம் சென்றாள்.

களத்திலே பெருமான் அவர்களின் திருமுகத்தை நேரில் கண்டவுடன், அவர் தன்னை அடக்க முடியாத உணர்ச்சியுடன்' ''பெருமான் அவர்களே, தாங்கள் உயிருடன் இருக்கும் பொழுது எங்களுக்கு எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் அவை யாவும் அற்பமாகி விடுகின்றன. தீன் என்னும் சன்மார்க்கத்தின் மன்னரே, நானும் என் தந்தையும் சகோதரரும், கணவரும் தங்களுக்கே ஆளாகிவிட்டோம்! உலகம் தங்களைப் பெற்றிருந்தால் உய்யும்! நாங்கள் இருந்தால் என்ன, இல்லா விட்டால் என்ன? தாங்கள் இருப்பதே பெருமகிழ்ச்சி!'' என்று கூறி உள்ளங் களிகூர்ந்தாள்.

ஆண்டவன் கட்டளையை நிறைவேற்ற வந்த திருத்தூதர் பெருமான் என்ற உண்மையான நம்பிக்கையின் விளைவே யன்றோ இந்த மெய்யன்பு!

## 16. உயிருக்குயிரான பெருமான்

குறைஷி ஒருவனிடம் 'ஸைத்' என்பவர் அடிமையாக இருந்தார். அந்தக் குறைஷி முஸ்லிம் ஆகிய ஸைத்தை வெட்டிக் கொல்ல முடிவு செய்தான். அதற்காக ஒரு நாள் குறிப்பிட்டு குறைஷி இனத்தவரில்

தலைமையாக உள்ள அனைவரையும் வேடிக்கை பார்க்க அழைத்திருந்தான். அப்படிக் கூடிய தலைவர்களிலே, அபூஸுஃபியான் என்பவரும் ஒருவர்.

கொலை செய்வதத்குச் சிறிது நேரம் இருக்கும் போது, அந்த அபூஸுஃபியான் ஸைதை நோக்கி• ‘‘ஸைத் இப்போது, உமக்குப் பதிலாக முஹம்மதை வெட்டுவதாக இருந்தால், அது உம் அதிர்ஷ்டந் தானே!’’ என்று கேட்டார்.

‘‘நபிபெருமான் அவர்களின் பாதத்தில் முள் தைப்பதால் என் உயிர் தப்பும் என்று அறிந்தாலும் அதை நான் வரவேற்க மாட்டேன். அவர் காலில் முள் குத்துவதைக் காட்டிலும் என் உயிரை இழப்பதே பெரும் பேறெனநினைக்கிறேன். ஆகவே, என்னை வெட்டிக் கொல்லுங்கள். நான் அஞ்சவில்லை. ஆண்டவன் மீது சத்தியம்!’’ என்று கூறினார் ஸைத்.

‘‘முஹம்மதைச் சேர்ந்தவர்கள் அவரை எவ்வளவு அன்புடன் கொண்டாடுகிறார்களோ, அவ்வளவு அன்புடன் வேறு யாரையும் கொண்டாடுவதில்லை’ என்று அபூஸுஃபியான் கூறினார்.

அதன் பின் சிறிதும் இரக்கம் காட்டாமல் ஸைத்தை வெட்டிக் கொன்று விட்டார்கள்.

# 17. வரும்படி யன்று; வாளே கொடுப்போம்!

குறைஷிகள், யூதர்களையும், அவர்களுடன் நட்புப் பூண்டிருந்த பல கூட்டத்தார்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு முஸ்லிம்களைத் தாக்க ஆயத்த மானார்கள். அவர்களுடைய சேனையில் 24,000 வீரர்கள் இருந்தனர். அவர்களை எதிர்த்து நிற்க முஸ்லிம்களிடம் இருந்த சேனையின் எண்ணிக்கை 3000 தான். எனவே மதினாநகரின் பாதுகாப்பற்ற திசையில் அகழ் ஒன்று வெட்டுவதென முடிவு செய் தனர். பரந்த வெளியில் நின்று கொண்டு எதிரிகளின் பெரும்படையோடு பொருதி மீள முடியாதென்ற எண்ணத்தில்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

எதிரிகள் மதீனா நகரைச் சுற்றி வளைத்து முற்றுகை யிட்டார்கள். முஸ்லிம்கள், நகருக்குள் அகழுக்குப் பின்னால் இருந்து கொண்டு, அகழைத் தாண்டி எதிரிகள் உள்நுழையாதபடி பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

முற்றுகை நீடித்துக் கொண்டிருந்தது. இதனால் அன்சாரி வகுப்பினர் மனம் தளர்ந்து போகக் கூடுமோ என்று பெருமானவர்கள் ஐயுற்றார்கள். எனவே அவர் களுக்கு ஊக்கம் ஊட்டுவதற்காகவேனும் எதிரிகளில் ஒரு கூட்டத்தாருடன் சமாதானம் செய்து கொள்ள லாகுமா என்று நினைத்தார்கள், கத்பான் என்ற பிரி

வினரை அழைத்து அவர்களைச் சண்டையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று கேட்க எண்ணினார்கள்.

அதற்குக் கைமாறாக மதீனாவின் விளை பொருள்களில் மூன்றில் ஒரு பங்கை வேண்டுமானால் கத்பான் கூட்டத்தாருக்குக் கொடுத்து விடலாம் எனக் கருதினார்கள்.

இந்த எண்ணத்தை அன்சாரி இனத்துத் தலைவர்களிடம் கூறி ஆலோசனை செய்த போது, அவர்கள் பெருமான் அவர்களிடம் ஒருகேள்வி கேட்டார்கள்.

"பெருமான் அவர்களே, இப்படிச் செய்யும் படி ஆண்டவன் கட்டளையிட்டிருக்கிறானா? அன்றித் தாங்கள் எண்ணுகிறீர்களா?" என்று கேட்டார்கள்.

தன் கருத்துத்தான் அது என்று பெருமான் அவர்கள் கூறினார்கள்.

"பெருமான் அவர்களே, ஆண்டவனுடைய கட்டளை இவ்வாறு இருக்கும் என்றால் நாங்கள் அதை மறுத்துச் சொல்ல முடியாது. ஆனால், இது தங்கள் கருத்தாயிருப்பதால், நாங்கள் கூறும் விண்ணப்பத்தையும் கேட்டுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். ஆண்டவனைப் பற்றிய உண்மைகளை அறிவதற்கு முன்னாலே, இந்த மதீனா நகரிலிருந்து விலை கொடுக்காமல் ஒரு பேரீச்சம் பழத்தைக் கூடக் கொண்டு போகமுடியாது—அவ்வாறு கொண்டு போகக் கூடிய ஆற்றல் அந்தக் கத்பான் கூட்டத்

தாருக்குச் சிறிது கூடக் கிடையாது. அப்படியிருக்க, தங்கள் மூலமாக ஆண்டவன் தன் நேர்வழியை எங்களுக்குக் காட்டி மேன்மைப்படுத்திவரும் இக் காலத்தில், வரும்படியில் மூன்றில் ஒரு பாகத்தைக் கொடுத்துவிட முடியுமா? அவர்களுக்கு நாம் நம் வாளைத்தான் நீட்ட வேண்டும்!'' என்று அந்த அன் சாரித் தலைவர்கள் கூறினார்கள்.

அன்சாரிகள் தளர்ச்சி யடையவில்லை, சிறிதும் குன்றா வீர உணர்ச்சியுடன் இருக்கிறார்கள் என்று அறிந்து பெருமான் அமைதியுற்றார்கள்.

## 18. நன்றி காத்த நல்ல மனிதர்

ஹனபாக்கூட்டத்தாருக்கும்முஸ்லிம்களுக்கும் ஒரு சண்டை நடந்தது. அது சிறு சண்டைதான். அந்தச் சண்டையில், அக்கூட்டத்தின் தலைவரான 'துமாமா' என்பவர் பிடிபட்டார். முஸ்லிம்கள் அவரைப் பிடித்துக் கொண்டு வந்து பெருமானார் திரு முன் நிறுத்தினார் கள். பெருமான் அந்த மனிதரை நோக்கி, ''நீர் எவ் விதம் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க் கிறீர்?'' என்று கேட்டார்கள்.

அதற்கு அந்தத் துமாமா என்ற நல்ல மனிதர் கூறிய பதில் இதுதான்.

''ஐயா, நீங்கள் என்னைக் கொலை செய்தால், முஸ்லிம்களைக் கொன்ற ஒருவனைப் பழிக்குப் பழி வாங்கியதாகும். ஆனால், இரக்கங்காட்டி என்னை

விடுவித்தால், அதற்காக வாழ்நாள் முற்றும் நன்றி யறிதலுள்ள ஒரு மனிதனைப் பெற்றதாகும்'',

துமாமா என்ற அந்த நல்ல மனிதர் கூறிய பதில் நாயகத் திருமேனியவர்களின் நெஞ்சைத் தொட்டது. உடனே அந்த நல்லவரை விடுவிக்குமாறு கட்டளை யிட்டார்கள்.

விடுதலை பெற்ற துமாமா அங்கிருந்து ஒரு சிறிய ஊற்றுக்குச் சென்றார். அதில் குளித்து விட்டுப் பெரு மானிடம் திரும்பி வந்தார்.

''ஐயா, நேற்றுவரை உங்கள் முகத்தை வெறுத் ததுபோல் உலகில் வேறு யாருடைய முகத்தையும் நான் வெறுத்ததில்லை. ஆனால் இன்றோ உங்கள் திருமுகத்தைப் போல் சிறந்தது எனக்கு வேறு எதுவும் இல்லை. நேற்றுவரை உங்கள் மார்க்கத்தை வெறுத் தது போல் வேறு எதையும் நான் வெறுக்க வில்லை. ஆனால் இன்றோ உங்கள் மார்க்கத்தை விடச் சிறந்தது எனக்கு வேறு எதுவும் இல்லை. கடவுள் சத்தியம்'' என்று கூறினார்.

அவர்களின் உண்மை உணர்ந்து பெருமானார் அவரை இஸ்லாத்தில் ஏற்றுக் கொண்டார்.

## 19. உள்ளத்தின் உள்ளே உள்ளான்

மதீனாவிலிருந்து இருநூறு கல் தொலைவில் கைபர்நாடு இருந்தது. அங்கிருந்த யூதர்கள் இஸ்லாத் திற்குப் பகையாய் மாறினார்கள், அவர்களை அடக்கு

வதற்காக முஸ்லிம் சேனை திரண்டெழுந்தது. இருநூறு குதிரைப் படை வீரரும் ஆயிரத்து நானூறு காலாட் படை வீரரும் அடங்கிய அந்தப் பெரும்படை போகும் வழியெல்லாம் படை நடைப் பாட்டுப் பாடிக் கொண்டு சென்றது. இடையிடையே, "அல்லாஹு அக்பர்" (அல்லா மிகப் பெரியவன்) என்னும் பெருமுழக் கத்தை எழுப்பிச் சென்றனர் இஸ்லாமிய வீரர்கள்.

ஒரு மைதானத்தின் வழியாகப் போகும் போது வீரர்கள் மிக உச்சமான குரலில் "அல்லாஹு அக்பர்" என்று முழங்கினார்கள்.

பெருமானவர்கள் அவ் வீரர்களை நோக்கிக் கூறி னார். "மெதுவாகவே சொல்லுங்கள். ஏனெனில் நீங்கள் அழைக்கும் இறைவன் வெகு தொலைவில் உள்ளவனோ அல்லது காது கேளாதவனோ அல்ல. உங்களால் அழைக்கப் படும் அவன் உங்கள் அருகி லேயே இருக்கிறான்; உங்களிடமே இருக்கிறான்."

பெருமான் அவர்களின் உண்மை விளக்கத்தை அறிந்த பின் முஸ்லிம் வீரர்கள் தங்கள் முழக்கத்தை மெதுவாகச் சொல்லிக் கொண்டு போனார்கள்.

## 20. நஞ்சிட்ட நயவஞ்சகி

கைபர்ச் சண்டை முடிந்தபின் பெருமான் அவர் கள் அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார்கள். போரில் எதிர்த்து நிற்க முடியாமல் தோல்வியடைந்து சரண்

அடைந்த யூதர்கள், முஸ்லிம்களுக்குத் திறை கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்கள். இவ்வாறு ஒப்பந்தம் நடந்து முடிந்து அமைதி நிலவிய வேளையிலும் சில யூதர்கள் தங்கள் குறும்புச் செயல்களை விடவில்லை.

ஸைனப் என்ற ஓர் யூதப்பெண், பெருமானவர்களையும் அவருடன் சில ஸஹாபாக்களையும் தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தாள். சூதுமிக்க அந்த மங்கை உணவில் நஞ்சிட்டுப் பெருமானையும் அவர் தம் தோழர்களையும் கொன்று விடும் எண்ணத்துடனேயே விருந்துக்கு அழைத்திருந்தாள். பெருமான் அவர்களும் தம் தோழர்களுடன் சென்று விருந்துண்ண அமர்ந்திருந்தார்கள்.

ஒரு பிடி உணவை வாயில் அள்ளிப் போட்டவுடனேயே பெருமானவர்கள் சாப்பிடுவதை நிறுத்தி விட்டார். மற்ற ஸஹாபாக்களும் அவ்வாறே உண்பதை நிறுத்தி விட்டார்கள். ஆனால் 'பாஷர்' என்ற ஒரு ஸஹாபா மட்டும் அதிகமாகச் சாப்பிட்டு விட்டதால் நஞ்சின் கொடுமையால் உயிர் துறந்தார்.

பெருமான் அவர்கள் ஸைனப் என்னும் அப்பெண்ணை அழைத்துக் கேட்டார்கள். அவள் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டாள். அவள் கூட இருந்த யூதர்கள், அவளைக் காப்பாற்றுவதற்காகத் தந்திரமாகப் பேசத் தொடங்கினார்கள்.

"ஐயா, தங்களைச் சோதிப்பதற்காகவே நாங்கள் உணவில் நஞ்சு கலக்க ஏற்பாடு செய்தோம்,

உண்மையில் தாங்கள் இறைவனின் தூதராக இருந்தால் நஞ்சு தங்களை ஒன்றும் செய்யாது. இல்லாவிட்டால் தங்களிடமிருந்து நாங்கள் விடுதலை பெறுவோம். அதற்காகவே இவ்வாறு செய்தோம்.'' என்று கூறினார்கள்.

பெருமானவர்கள் தங்களைப் பொறுத்த வரையில் பழிவாங்க நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால், பாஷர் என்பவர் உயிர் துறந்தது அவர்களுக்குப் பெருந் துயரம் அளித்தது. அதனால், அக்கொலைக்குப் பழியாக அப்பெண்ணை வெட்டி விடும்படி கட்டளையிட்டார்கள்.

# 21. மகளைக் கொன்றவனுக்கும் மன்னிப்பு

பெருமானவர்களின் மகளார் ஸைனப் மக்காவிலிருந்து மதினாவிற்குச் செல்வதற்காக ஒட்டகத்தின் மீது ஏறினார்கள். அப்போது ஹப்பார் என்பவன் எதிர்பாராத விதமாக ஈட்டியைத் திருப்பிக் கொண்டு மகளாரைத் தாக்கினான். அதனால் அவர்கள் கீழே விழ நேரிட்டது. கர்ப்பிணியாக இருந்த மகளார் கீழே விழுந்த அதிர்ச்சியினால் கருப்பங் கலைந்து சில நாட்களில் உயிர் துறக்க நேரிட்டது. அவர்கள் இறந்த செய்தி யறிந்ததும் ஹப்பார் என்ற அத்தீயவன், அங்குத் தங்கியிருந்தால் தன் உயிருக்கு ஆபத்து நேரிடும் என அஞ்சி அயல் நாட்டிற்கு ஓடி விட்டான்

சிறிது காலத்திற்குப் பின் அவன் தன் நாட்டிற்குத் திரும்ப நேரிட்டது. அப்போது அவன் நேராகப் பெருமானிடம் வந்து சேர்ந்தான். பெருமானை நோக்கி, ''உங்கள் கருணையையும், தயாளசிந்தனையையும் பகைவரையும் மன்னிக்கும் உயர் பண்பையும் எண்ணிப்பார்த்த பின்பே உங்களைத் தேடி வந்தேன். ஆண்டவனுடைய திருத்தூதரே, உங்கள் மூலமாகவே இறைவன் எங்களுக்கு நேர்வழி காட்டி நாசமாகாமல் காப்பாற்றினான். நான் தங்களுக்குப் பெருங் குற்றம் செய்திருக்கிறேன். ஆயினும் என்னை மன்னிக்க வேண்டுகிறேன்'' என்று அவன் வேண்டி நின்றான்.

அவன் செய்தது பெருங்குற்றமாயினும், தனக்கிழைத்த குற்றமாக இருக்கவே பெருமானவர்கள் சற்றும் தயங்காமல் அவனை அப்போதே மன்னித்து விட்டார்கள்.

## 22. பகைவர்களுக்கும் வாழ்த்து

தாயிப் என்னும் ஊரில் தக்கீப் என்னும் கூட்டத்தார் இருந்து வந்தார்கள். அவர்கள் முஸ்லிம்களின் பகைவர்கள் என்னும் பேராற்றல் படைத்தவர்கள். முஸ்லிம்களைப் பகைத்துப் போராடிய ஹலாஸீன் கூட்டத்தாரில் சிலர் தாயிப்புக்குச் சென்று அடைக்கலம் புகுந்தார்கள். அக்கூட்டத்தாரை விரட்டிச் சென்ற முஸ்லிம் படை தாயிப்பை முற்றுகை யிட்டது. தக்கீப் கூட்டத்தார்' தங்களைச் சரணடைந்தவர்களையும்

சேர்த்துக் கொண்டு கோட்டைக்குள்ளே புகுந்து கொண்டார்கள். ஓர் ஆண்டுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருந்ததால், முற்று கையைப் பற்றிக் கவலைப் படாமல் அவர்கள் கோட்டைக்குள்ளே நெடுநாட்கள் ஒளிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் போருக்கு வருவதாகத் தெரியாது போகவே, பெருமான் அவர்கள் நௌபல் என்ற பெரியவருடன் சேர்ந்து ஆலோசித்து, முற்றுகையைக் கைவிட்டுத் திரும்ப முடிவு செய்தார்கள்.

அவ்வாறு திரும்பும் போது, முஸ்லிம்களில் சிலர், பெருமானை அணுகி, அந்தக் கூட்டத்தாரைச் சபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதே தாயிப்பில், ஒன்பது ஆண்டுகளுக்கு முன் பெருமான் அவர்கள் இஸ்லாமிய நன்மார்க்கம் பற்றி விளக்கிப் பேசிக் கொண்டிருந்த போது, தாயிப் வாசிகள் பெருமான் அவர்கள் மீது கற்களை வீசிப் பலமான காயம் உண்டு பண்ணி விட்டார்கள். இரத்தக் காயம் ஏற்படுத்திய அத்தீயவர்களைக் சபிக்கும்படி முஸ்லிம்கள் ஒரு முகமாகப் பெருமானை வேண்டிக் கொண்டார்கள்.

ஆனால் பெருமானவர்கள் அவர்களைச் சபிக்கவில்லை. இறைவனை நோக்கி, "ஆண்டவனே, தக்கீப் கூட்டத்தாருக்கு நல்லற வழியைக் காட்டு. என்னிடம் அவர்களை வரும்படி செய்." என்று வேண்டிக் கொண்டார்கள்.

அவர்களுடைய வேண்டுகோள் நிறைவேறியது. சிறிது காலத்திற்குப் பின்னர் அதே தக்கீப் கூட்டத்தார்

தாமாகவே வந்து பெருமானின் ஆசியைப் பெற்று இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார்கள்.

# 23. பெருமான் இருப்பதே பெரிது

ஹுனைன் சண்டையில் பல கைதிகள் பிடிபட்டார்கள். ஏராளமான பொருள்களும் கிடைத்தன. பிடிப்பட்டவர்களை மீட்டுக் கொண்டு போக அவர்களின் உறவினர்கள் வரக் கூடும் என்று சில நாட்கள் வரை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யாரும் வராது போகவே, பெருமானவர்கள் கைதிகளையும் பொருள்களையும் முஸ்லிம் படை வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள்.

முதலில் ஐந்தில் ஒரு பங்கு பொருள் பொது நிதிக்காகவும், ஏழைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டது. மீந்தவற்றையே படைவீரர்களுக்குப் பங்கிட்டளித்தார்கள். அவ்வாறு பங்கிட்ட போது புதிதாக இஸ்லாத்தில் சேர்ந்த மக்காவாசிகளுக்கு மற்றவர்களுக்குக் கொடுத்ததைக் காட்டிலும் சிறிது அதிகமாகவே பங்குப் பொருள் கொடுத்தார்கள்.

அன்சாரி இனத்தைச் சேர்ந்த இளைஞர் சிலருக்கு இந்த நிகழ்ச்சி சிறிது மனக் கசப்பை யளித்தது. அவர்கள் தங்களுக்குள் பலவாறாய்ப் பேசி மனம் சலித்துக் கொண்டார்கள். இச் செய்தி பெருமானவர்கள் காதுக்கு எட்டியது. அவர்கள் அன்சாரி இனத்தவர்களை அழைத்துக் கேட்டார்கள்.

"நான் குறைஷி வீரர்களுக்கு அளவிற்கு அதிகமாகக் கொடுத்தது நியாயமற்றதென்று நீங்கள் ஐயப்பட்டதுண்டா?"

"பெருமானவர்களே, எங்களில் சில இளைஞர்கள் அவ்வாறு கூறியது உண்மைதான்" என்று முதியவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

பெருமானவர்கள் அந்த அன்சாரிகளை நோக்கி உருக்கமான சில கேள்விகள் கேட்டார்கள்.

"தொடக்கத்தில் நீங்கள் வழி தவறிச் சென்று கொண்டிருந்தீர்கள். ஆண்டவன் உங்களை நேர் வழிக்குக் கொண்டு வந்தது என் மூலமாக அல்லவா?

"நீங்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் பகைத்துக் கொண்டு வாழ்ந்த நிலையை மாற்றி ஆண்டவன் உங்களை ஒற்றுமைப் படுத்தியது என் மூலமாக அல்லவா?

"வறுமைக்காளாகியிருந்த உங்களை ஆண்டவன் செல்வர்களாய் உயர்த்தியது என் மூலமாக அல்லவா?"

பெருமான் அவர்கள் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுக் கொண்டுவர, அக் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் பதிலாக, "ஆண்டவனின் உதவியும், அவனுடைய திருத்தூதரின் உதவியும் யாவற்றினும் உயர்ந்தன" என்று அன்சாரிகள் கூறிக் கொண்டே வந்தார்கள்.

பெருமானவர்கள் இத்துடன் நில்லாது அவர்கள் மனத்தில் தைக்கும்படியாகச் சில கருத்துக்களையும் கூறினார்கள்.

"அன்சாரிகளே, என் கேள்விகளுக்கு நீங்கள் இப்படித் தான் விடை கூற வேண்டும் என்பதில்லை. வேறு மாதிரியாகவும் கூறலாம். "ஐயா, உங்கள் இனத்தவர்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல், உங்களைப் பொய்யர் என்று கூறித் துரத்திய போது நீங்கள் எங்களிடம் வந்தீர்கள். நாங்கள் உங்களை உண்மையானவராக ஏற்றுக் கொண்டோம். உதவி யற்ற நிலையில் நீங்கள் எங்களை நாடி வந்தீர்கள். நாங்கள் உங்களுக்கு உதவி செய்தோம். ஒன்றுமில்லா மல் வந்த உங்களுக்கு எல்லாம் கொடுத்து நாங்கள் ஆதரவளித்தோம்."

"அன்சாரிகளே, இவ்வாறு நீங்கள் விடையளித் தால், நான் அதை உண்மை என்று தான் ஏற்றுக் கொள்வேன். குறைஷிகளுக்கு நான் ஏன் அதிகமாகக் கொடுத்தேன். அவர்கள் புதிதாக முஸ்லிம் ஆனவர் கள்—இப்போது பெருந்துன்பத்திற்காளாகியிருக்கிறார் கள். அதிகமாகச் சில பொருள்களைக் கொடுத்து அவர் கள் துன்பத்தைச் சற்று ஆற்றலாம் என்று கருதி னேன். அன்சாரிகளே, அவர்கள் ஆடுகளையும் ஒட்ட கங்களையும் தங்கள் வீடுகளுக்குக் கொண்டு செல்கி றார்கள். நீங்கள் இந்த முஹம்மதையல்லவா உங்க ளோடு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எந்த இக்கட் டான நேரத்திலும் நான் உங்களுடன் இருக்கிறேனே.

இது பெரிதில்லையா? ஆண்டவன் உங்கள் மீது கருணை கொண்டு உங்களையும் உங்கள் பிள்ளைகளை யும் பேரர்களையும் வாழ்த்தியருள்வாராக!

நபிநாயக மவர்களின் உருக்கமான சொற்கள் அன்சாரிகளை அழவைத்து விட்டன. ''எங்களுக்கு முஹம்மது மட்டுமே போதும்!'' என்று கூறித் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தார்கள். கண்ணீரால் அவர்கள் தாடிகள் நனைந்து விட்டன.

## 24. நிழலை வெறுத்த அன்பர்

ஒரு நாள் நடுப்பகலில், ஸஹாபாக்களில் ஒருவர் மதினாவில் உள்ள தம் தோட்டத்தில் நிழலில் உட் கார்ந்து இன்பமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந் தார். அப்போது அவருக்குப் பெருமான் அவர்களின் நினைவு ஏற்பட்டது. ஷாம் தேசத்தில் முஸ்லிம் களுக்கு எதிராகப் படைதிரளும் செய்தி கேட்டு, அங் கேயே சென்று எதிர்த்துப் போரிடப் பெருமானவர்கள் முப்பதினாயிரம் வீரர்களுடன் சென்று கொண்டிருந் தார்கள். இந்த நினைவு ஏற்பட்டதும் அந்த ஸஹாபா வுக்கு மனம் கொதித்தது. ''அங்கே பெருமானவர்கள் வெயிலில் காய்ந்து சென்று கொண்டிருக்க, இங்கே நீ இன்பமா அனுபவித்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டார். உடனே தம் ஒட்டகத்தை ஆயத்தப் படுத்தச்செய்து, பெருமா

னவர்கள் சென்ற திக்கில் செலுத்தினார். சில நாட்களில், பெருமானவர்களின் படைகளோடு அவரும் சென்று சேர்ந்து கொண்டார்.

## 25. வள்ளல் பெற்ற திருமகள்

எமன் மாநிலத்தில் தை என்ற கூட்டத்தார் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தூண்டுதலால் இஸ்லாத்திற்கு எதிர்ப்பாகக் கலகமும் குழப்பமும் ஏற்பட்டன. ஹஸரத் அலியவர்களைப் பெருமானவர்கள் அங்கு அனுப்பிக் குழப்பத்தை அடக்கி வரப் பணித்தார்கள்.

ஹஸரத் அலியவர்கள் வரும் செய்தி யறிந்து, அம் மாநிலத்தின் தலைவனான அதி என்பவன் பயந்தோடி விட்டான். தலைவனற்ற அக் கூட்டத்தாரை எளிதில் அடக்கி, அவர்களில் பலரை அடிமையாக்கிக் கொண்டும் பொருள்களைக் கைப்பற்றிக் கொண்டும் மதீனாவிற்கு வந்து சேர்ந்தார்கள்.

சிறைப்பட்டவர்களிலே அதியின் உடன் பிறந்தவளான ஸபானா என்ற மங்கையும் இருந்தாள். அவள் பெருமானவர்கள் முன் கொண்டுவந்து நிறுத்தப் பட்டவுடன், அவர்களை நோக்கி, "ஆண்டவனுடைய தூதரே, என் தந்தை இறந்துவிட்டார். என்னை ஆதரிக்க வேண்டிய உடன்பிறந்தவனோ ஓடிச் சென்றுவிட்டான். இந்நிலையில் என்னை மீட்பதற்கு யாரும் இல்லை. ஆகவே, தாங்கள் கருணைகூர்ந்து பொருள் எதுவும் எதிர்பாராமல் என்னை விடுதலை

செய்ய வேண்டுகிறேன். தங்கள் கருணை ஒன்றையே நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

என் தந்தை ஹாத்திம் கருணையுள்ளம் படைத்தவர். சிறைப்பட்ட எத்தனையோ பேரை அவர் பணம் கொடுத்து விடுதலை செய்திருக்கிறார். பெண்களின் மானத்தைப் பாதுகாத்திருக்கின்றார். ஏழைகள் பலரைக் காப்பாற்றியிருக்கிறார். துன்பப்பட்டவர்களுக்கு ஆதரவளித்திருக்கிறார். இல்லை என்று வந்தவர்களுக்கு இருப்பதை யள்ளிக் கொடுத்திருக்கிறார்— ஆனால், அவர் மகளான என்னைக் காப்பதற்கு யாருமில்லை'' என்று கலங்கிக் கண்ணீர் உகுத்தாள்.

ஹாத்தீம் என்பவரைப் பற்றி அரபு நாடு முழுவதுமே அறிந்திருந்தது. அவர் பெரும் வள்ளல். அவரைப் பற்றிப் பெருமானாரும் அறிந்து வைத்திருந்தார். எனவே, அந்த வள்ளலின் அருமைச் செல்வியை நோக்கி அவர் ஆதரவுடன், ''பெண்ணே, ஒரு முஸ்லிமுக்கு இருக்க வேண்டிய நல்ல குணங்கள் அனைத்தும் உன் தந்தையிடம் இருந்தன. ஒரு முஸ்லிம் அல்லாதவரின் ஆத்மாவுக்காக பிரார்த்தனை செய்ய எனக்கு அனுமதியிருந்தால் நான் அவர் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்தித்திருப்பேன். அவ்வளவு நல்ல மனிதர் அவர்''. என்று கூறி முஸ்லிம்களை நோக்கி இரக்க முள்ளவர்களை ஆண்டவன் நேசிக்கிறான். அவர்களுக்குப் பரிசும் வழங்குகிறான். இதோ, இரக்கமுள்ள ஹாத்திமின் மகளான இப்பெண் விடுதலையாகி விட்டாள்'' என்றார்கள்.

பெருமான் அவர்களின் கருணையை அறிந்த அந்தப் பெண் மீண்டும் அவர்களை நோக்கி, ''என் உறவினர் அனைவரும் சிறையில் இருப்பதால், என்னையும் சிறையிலேயே வைத்திருக்க வேண்டு கிறேன். அவர்களை வெட்டிக் கொல்வதாக இருந்தால் முதலில் என் தலையை வெட்டுமாறு கட்டளையிட வேண்டுகிறேன். ஏனெனில், என் உறவினர் இறந்து போனபின் நான் மட்டும் வாழ்ந்திருக்க விரும்ப வில்லை'' என்று கூறினாள்.

இதைக் கேட்ட பெருமான் அவர்கள் பெருங் கருணைகொண்டு, பிடிபட்ட தைக்கூட்டத்தார் அனை வரையுமே விடுதலை செய்ய ஆணையிட்டார்கள்.

திரும்பி வந்த தன் சகோதரியின் வாயிலாகப் பெருமானவர்களின் உயர் குணங்களைக் கேட்டறிந்த அதி, அவளுடன் மதீனாவிற்கு வந்து பெருமானைக் கண்டு அவர்கள் வாழ்த்தைப் பெற்று இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டான்.

## 26. கவிஞன் பெற்ற பரிசு

அரபி நாட்டிலே ஒரு பெருங்கவிஞர் இருந்தார். அவர் பெயர் கஅப் இப்னுஸுஹைர். இஸ்லாத்தைக் கண்டித்தும், பெருமான் அவர்களைப் பழித்தும் கவி பாடுவதே தொழிலாகக் கொண்டிருந்தார் அக்கவிஞர். முஸ்லிம்களின் பகைவரான அக்கவிஞரைக் கண்ட இடத்தில் வெட்டித் தள்ளும்படி பெருமானவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள்.

கஅபின் சகோதரர் முஸ்லிமாகியிருந்தார். அவருடைய இடைவிடாத போதனையினால் கஅப்பும் இஸ்லாத்தைத் தழுவ எண்ணங் கொண்டார். ஆனால் பெருமானின் கட்டளைப்படி முஸ்லிம்கள் தன்னைக் கண்டறிந்து கொன்று விட்டால் என்ன செய்வதென்ற அச்சமும் அவர் உள்ளத்தில் தோன்றியிருந்தது.

ஒருநாள் யாருக்கும் தெரியாமல் அவர் மதீனா வந்து சேர்ந்தார். மதீனா நகரில் உள்ளவர்களுக்கோ அவர் யாரென்று தெரியாது.

க அப் பள்ளிவாசற் பக்கம் வந்து சேர்ந்த போது பெருமானவர்கள், மக்கள் நடுவில் நின்று இறைவன் உண்மைகளையும் கட்டளைகளையும் எடுத்தோதிக் கொண்டிருந்தார்கள். மக்கள் பயபக்தியுடனும் உன்னிப்பாகவும் அத்திரு மொழிகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கஅப் கூட்டத்தினுள் புகுந்தார். பெருமானவர்கள் சொற்பொழிவு முடிந்ததும் அவர் முன் சென்றார்.

"ஆண்டவனுடைய திருத்தூதரே! கஅப் என்பவனை ஒரு முஸ்லிமாகத் தங்கள் திருமுன்னே கொண்டு வந்தால் நீங்கள் அவருக்கு மன்னிப்புக் கொடுப்பீர்களா?" என்று கேட்டார்.

"ஆம்; மன்னித்து விடுவேன்" என்று நாயகமவர்கள் கூறினார்கள்.

"நான் தான் கஅப்" என்றார் புலவர்.

உடனே அவரைக் கொல்ல வேண்டும் என்று கூடியிருந்த முஸ்லிம்கள் துடித்தார்கள். பெருமானார் அவர்களை அமைதிப் படுத்தினார்.

"நான் இவரை மன்னித்து விட்டேன்" என்று பெருமானார் கூறினார்.

அப்போதே அப் பெருமானைப் போற்றி ஒரு பாடல் பாடினார். அரபி மொழியில் உள்ள அழகான இசைப் பாடல்கள் பலவற்றிலே அது மேன்மை பெற்று விளங்குகிறது.

இப்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த நபிகள் நாயகம் தமது மேலாடையை எடுத்து அக்கவிஞருக்குப் பரிசளித்தார்கள். அக்கவிஞரின் குடும்பத்தார் வழிவழியாக அம்மேலாடையை ஒரு புனிதப் பொருளாகக் காப்பாற்றிவந்தார்கள். பிற்காலத்தில் அம்மேலாடை நாற்பதினாயிரம் திர்ஹமுக்கு விலையாயிற்று. இப்போது அம்மேலாடை கான்ஸ்டாண்டிநோபிலில் புனிதப் பொருளாகப் பாதுகாத்து வைக்கப் பெற்றுள்ளது.

## 27. பாவிக்காகச் செய்த பிரார்த்தனை

முஸ்லிம்களிலே முனாபிக்கீன்கள் என்று ஒரு கூட்டத்தார் இருந்தார்கள். முனாபிக்கீன்கள் என்றால் வஞ்சகர்கள் என்று பொருள். இவர்கள் இஸ்லாத்திலே சேர்ந்து கொண்டு உள்ளுக்குள் இருந்தபடியே இஸ்லாத்திற்குத் தீங்கு செய்து கொண்

டிருந்தார்கள். பகைவர்களுக்குக் கையாட்களாகவும், முஸ்லிம்களிடையே பிரிவினை செய்பவர்களாகவும் விளங்கினார்கள். பலவகையான தந்திரங்களைக் கையாண்டும் இவர்களால் இஸ்லாத்தை அழிக்க முடியவில்லை,

இஸ்லாமியரை நிரந்தரமாய்ப் பிரித்துவைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், இக்கூட்டத்தார் ஒருமுறை தனிப் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டினார்கள். தபூக் சண்டைக்குப் பெருமானவர்கள் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது இக்கூட்டத்தினர் வந்து புதிய பள்ளி வாசலில் தொழுகை நடத்தி வைக்குமாறு வேண்டிக் கொண்டார்கள். சண்டை முடிந்தபின் வந்து பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி நாயகமவர்கள் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள்.

ஆண்டவன் அருளால் பெருமான் அவர்கள் இப்புதிய பள்ளிவாசல் கட்டப் பெற்றதன் நோக்கத்தை அறிந்தார்கள். முஸ்லிம்களுக்குத் தீங்கு செய்ய வேண்டும் சென்ற தீய கருத்தில் எழுப்பப் பெற்ற இப்பள்ளி வாசலைத் தீயிட்டுக் கொளுத்தி விடுமாறு பெருமானவர்கள் கட்டளையிட்டார்கள். அவ்வாறே அது எரித்துச் சாம்பலாக்கப்பட்டது.

அப்துல்லா இப்னு உபை என்பவன் இந்த முனாபிக்கீன்களின் தலைவனாக இருந்தான். அவன் கடைசியில் ஹிஜ்ஜிரி ஒன்பதாம் ஆண்டில் கடுமையான நோய்க்கு ஆளானான். பிழைத்து எழக்கூடும் என்ற நம்பிக்கையே யில்லாத அளவு அவனை நோய் ஆட்

கொண்டு விட்டது. கடைசிக் காலத்தில் தான் அவனுக்குப் புத்திவந்தது. அவன் மகன் அப்துல்லா உண்மையான முஸ்லிம். இஸ்லாத்திலும் அதன் திருத் தூதரிடத்திலும் உண்மையான நம்பிக்கை கொண் டவர். இரண்டு வேண்டுகோள்களுடன் உபை தன் மகன் அப்துல்லாவைப் பெருமானிடம் அனுப்பி வைத்தான். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தனயன் பெருமானை நாடிச் சென்றார்.

பெருமானவர்களிடம் சாவின் பிடியில் அகப்பட்டுக் கொண்டு இருந்த தன் தந்தையின் வேண்டு கோள்களை உருக்கமாகக் கூறினார் அப்துல்லா. பெருமான் இரக்கத்தோடு அவ்விண்ணப்பத்தைக் கேட்டருளினார். உபை இறந்தபின் அவன் பிணத்தை போர்த்தி அடக்கம் செய்யப் பெருமான் அவர்கள் தம் மேலாடையைக் கொடுக்க வேண்டும் என்பது முதல் வேண்டுகோள். பெருமான் அதற்கு இணங்கித் தம் சட்டையைக் கழற்றிக் கொடுத்தார். உபை இறந்த பின் பெருமான் அவர்களே நேரில் வந்து அவனுக்காக மரணப் பிரார்த்தனை நடத்த வேண்டும் என்பது இரண்டாவது வேண்டுகோள். அவ்வாறே தான் வந்து தொழுகை நடத்துவதாக பெருமான் வாக்குக் கொடுத் தார். அப்துல்லா மனநிறைவோடு திரும்பிச் சென்று விட்டார்.

உபை இறந்தபின் பெருமானுக்குச் செய்தியனுப் பினார்கள். அவனுக்காக மரணப் பிரார்த்தனை செய்யப் பெருமான் அவர்கள் புறப்பட்டார்கள்.

அப்போது ஹஸரத் உமர் அவர்கள் பெருமானின் சட்டை நுனியை ஆத்திரத்தோடு பிடித்துக் கொண்டார்கள்.

"இஸ்லாத்தின் பகைவன் அவன். தாங்கள் ஏன் அவனுக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்?" என்று கேட்டார் உமர்.

பெருமான் அவர்களுக்குப் பகைவன் நண்பன் என்ற வேறுபாடு கிடையாது. "உமர், நான் பிரார்த்தனை செய்யத் தான் போகிறேன்!" என்று உறுதியான குரலில் கூறினார்கள்.

ஹஸரத் உமர் அவர்களுக்கு ஆத்திரம் அதிகமாகியது.

"அந்த வஞ்சகர்களுக்காக நீங்கள் மன்னிப்புக் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி. ஆனால் எழுபது தடவை நீங்கள் மன்னிப்புக் கேட்டாலும் அல்லா அவர்களை மன்னிக்கப் போவதில்லை. திருக்குர் ஆனிலேயே இவ்வாறு தான் அருளப்பட்டுள்ளது" என்று எடுத்துரைத்தார் ஹஸரத் உமர்.

"அவர்களுக்காக மன்னிப்புக் கேட்கவோ, கேட்காமல் இருக்கவோ ஆண்டவன் எனக்கு உரிமை கொடுத்திருக்கிறார். நான் அவர்களுக்காக மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன். என் உரிமையை நான் நிறைவேற்றுவேன். மன்னிப்பதும் மன்னிக்காமல் இருப்பதும் ஆண்டவன் விருப்பம்!" என்று கூறி விட்டு நபி பெருமான் புறப்பட்டுச் சென்றார்.

உபைக்காக மரணப் பிரார்த்தனை செய்த அன்றைய தினம் பெருமானின் அருள் உள்ளத்தை உணர்ந்து ஆயிரம் முனாபிக்கீன்கள் உண்மையான முஸ்லிம்கள் ஆனார்கள்.

# 28. காப்பவன் இறைவனே

ஒரு சண்டை முடிந்து பெருமான் அவர்கள் திரும்பிவந்து கொண்டிருந்தார்கள். வழியில் களைப் பாறிச் செல்ல எண்ணினார்கள். தங்கள் வாளை ஒரு மரத்தின் கிளையில் தொங்கவிட்டுவிட்டு அதன் அடியில் படுத்தார்கள். களைப்பின் மிகுதியால் அவர்கள் தூங்கி விட்டார்கள்.

பகைவர்களில் ஒருவன் அவ்வழியாக வந்தான். நபிபெருமான் தூங்குவதைக் கண்டு அவர்கள் அருகில் வந்தான். மரக்கிளையில் தொங்கிய வாளை அவன் எடுத்துக் கொண்டான். அப்போது திடுமென்று பெருமான் அவர்கள் விழித்துக்கொண்டார்கள். அந்தப் பகைவன் அவர்களின் தலைப்பக்கத்தில் உருவிய வாளுடன் நின்று கொண்டிருந்தான்.

விழித்தெழுந்த பெருமானை நோக்கி அவன் கேட்டான்.

"முஹம்மது! இப்போது என்னிடமிருந்து உம்மை யார் காப்பாற்றுவார்?"

உரத்த குரலில் அவன் கேட்ட கேள்விக்கு, பெருமான் அவர்கள் அமைதியாகப் பதில் சொன்னார்கள்.

"அல்லா!"

அஞ்சாது நபியவர்கள் கூறிய இந்தப் பதில் ஏனோ அப்பகைவனை நடுக்கங் கொள்ளச் செய்தது. நடுக்க முற்ற அவன் வகையிலிருந்த வாள் நழுவிக் கீழே விழுந்தது.

பெருமானவர்கள் அவ்வாளைக் கையில் எடுத்துக் கொண்டார்கள்.

"இப்போது உன்னை யார் காப்பாற்றுவார்கள்?" என்று கேட்டார்கள்.

கைவாளை யிழந்த அவன் மேலும் அச்சத்துடன், "தங்களைத் தவிர ஒருவருமில்லை" என்று பதிலளித்தான்.

அருள் நிறைந்த நெஞ்சினராகிய பெருமான் அவர்கள், "என்னைக் காப்பாற்றிய அல்லாவே உன்னையும் காப்பாற்றுகிறான்" என்று கூறி அவனை மன்னித்து அனுப்பிவிட்டார்கள்.

## 29. கடன் தீர்த்த பெருமான்

ஹிஜ்ரி பதினோராம் ஆண்டில் இஸ்லாம் மார்க்கம் முழுமையெய்தி விட்டதென்றும், பெருமானவர்கள் இவ்வுலகத்தைத் துறக்க வேண்டிய காலம் அணுகி விட்டதென்றும் இறைவனால் அறிவிக்கப்பட்டது.

உஹதுச் சண்டையில் உயிர் துறந்தவர்களுக் காகப் பிரார்த்தனை செய்ய வேண்டிய கடமை மீந்தி ருந்தது. ஆகவே அவ்வீர முஸ்லிம்கள் அடங்கியிருந்த இடத்திற்குச் சென்று அவர்கள் மேலுலக நல்வாழ்வு

காகப் பிரார்த்தனை செய்தார்கள். அங்கு கூடியிருந்த முஸ்லிம்களுக்கு அவர்கள் ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள்.

எதிர்காலத்தில் முஸ்லிம்கள் ஒருவருடன் ஒருவர் போரிடக் கூடாதென்றும், இரத்தம் சிந்தலாகாதென்றும் அறிவுறுத்தினார்கள். அவ்வாறு போரிட்டுக் கொலைகளில் ஈடுபட்டால், முன்னுள்ள பல கூட்டத்தார்களும் உட்பகை காரணமாக அழிவெய்தியது போல அவர்களும் அழிந்து போக நேரிடும் என்று எச்சரித்தார்கள்.

சிலநாட்களுக்குப் பின் மதீனாவில் உள்ள அடக்கத் தலத்துக்குச் சென்று அங்கே அடக்கமானவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தார். அங்கிருந்து திரும்பி வந்தது முதல் அவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. நாளுக்கு நாள் நோய் மிகுந்து வந்தது.

உடலில் வலுவிருந்த வரைவில் மெல்ல மெல்லப் பள்ளிவாசலுக்கு நடந்து சென்று தொழுகையை நடத்தினார்கள். அந்த நிலை கடந்தபோது ஹஸரத் அபூபக்கர் அவர்களை தமக்குப் பதிலாகச் சென்று தொழுகை நடத்தும்படி வேண்டிக் கொண்டார்கள்.

ஒருநாள் சிறிது உடல் நலமுற்றிருப்பது போல் தோன்றியது. எனவே பெருமானவர்கள் குளித்து விட்டுப் பள்ளி வாசலுக்கு சென்றார்கள். அப்போது தொழுகை நடந்து கொண்டிருந்தது. ஹஸரத்

அபூபக்கர் அவர்களே தொழுகையை நடத்திக்கொண் டிருந்தார்கள். பெருமானவர்கள் வந்ததைக் கண்டதும் அபூபக்கர் அவர்கள் தம் இடத்தை விட்டு விலகிக் கொள்ள முயன்றார்கள். ஆனால் விலக வேண்டாம் என்று குறி காட்டிவிட்டு பெருமானவர்கள் ஹஸரத் அவர்களின் அருகில் இருந்து தொழுகையை நடத்தி னார்கள். தொழுகை முடிந்தபின் பெருமானவர்கள் ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள். அதுவே அவர் களின் கடைசிச் சொற்பொழிவாகும்.

அந்தச் சொற்பொழிவில் அவர்கள் ஹஸரத் அபூபக்கர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். முன்னிருந்த நபிமார்களின் அடக்கத் தலங்களை வணக்கத் தலங்களாய் மாற்றியது போலத் தம் முடைய அடக்கத் தலத்தை ஆக்கிவிடக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிச் செய்வதைத் தாம் விலக்குவதாக அறிவித்தார்கள். கடைசியில் அங்கு கூடியிருந்தவர்களை நோக்கி, ''முஸ்லிம்களே, நான் எவருக்காவது தீங்கு இழைத்திருந்தால் அதற்கு ஈடு செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். நான் எவருக் காவது கடன்பட்டிருந்தால் அதைத் தீர்ப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறேன்'' என்று கூறினார்கள்.

''ஆண்டவனின் தூதரே, தாங்கள் எனக்கு மூன்று திர்ஹம் கடன்பட்டிருக்கிறீர்கள். எவ்வாறெனில் ஒருமுறை தங்களிடம் ஓர் ஏழைவந்து கேட்டபோது மூன்று திர்ஹம் கொடுக்கும்படி எனக்குக் கட்டளை

யிட்டீர்கள். அது இன்னும் தரப்படாமல் இருக்கிறது’’ என்றார் ஒருவர்.

உடனே பெருமான் ஹஸரத் அப்பாஸ் அவர்களை நோக்கி, அப்போதே மூன்று திர்ஹம் அந்த மனித ருக்குக் கொடுக்கும்படி ஆணையிட்டார்கள்.

பின்னர் மதக்கடமைகள் குறித்து அறிவுரைகள் கூறிக் கடைசியில், உலகில் வீண் கவுரவத்தை நாடாமலும், பிறருக்குத் தீங்கு எண்ணாமலும் இருப்ப வர்களுக்காகவே மேலுலக வீடு பேறு உள்ளதென்றும், இறைவனுக்கு அஞ்சி பாவத்தினின்றும் விலகியவர் களுக்கு நல்ல முடிவு உண்டாகும் என்றும் கூறுகின்ற திருக்குர்ஆன் மொழியை ஓதிமுடித்து வீடு திரும்பி னார்கள்.

அதன்பின் அவர்கள் பள்ளிவாசலுக்குச் செல்ல வில்லை.

# 30. முகம்மது ஒரு தூதரே!

அன்று திங்கட்கிழமை. பெருமானவர்களுக்கு உடல் நலமுற்றிருப்பது போல் தோன்றியது. நண்பகலில் ஹஸரத் அபூபக்கர் அவர்களின் மகன் அப்துற்ரகுமான் பெருமானைப்பார்ப்பதற்காக வந்திருந் தார். அவர் கையில் பல்குச்சி ஒன்று இருந்தது. பெருமான் அவர்கள் அப் பல்குச்சியையே உற்று நோக்கினார்கள். உடனே ஹஸரத் ஆயிஷா நாயகி

யவர்கள் பெருமானின் கருத்தை அறிந்து அப் பல் குச்சியை வாங்கிக் கொடுத்தார்கள். பெருமானவர்கள் பல் விளக்கினார்கள். அடிக்கடி முகத்தைத் தண்ணீரினால் துடைத்துக் கொண்டேயிருந்தார்கள். ஆண்டவன் நினைவாகவே யிருந்தார்கள்.

''அல்லா மேலான தோழனிடம்'' என்று மும்முறை கூறினார்கள். அவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதே கைகள் அசைவற்றுப் போயின. கண்கள் மூடின. உயிர் புனித உலகம் நோக்கிப் போய் விட்டது.

அறுபத்து மூன்று ஆண்டுகட்கு முன் ரபிஉல் அவ்வல் மாதம் பன்னிரண்டாம் நாள் திங்கட் கிழமையன்று பிறந்த அவர்கள் அன்று ஹிஜ்ரி பதினோராம் ஆண்டு அதே மாதம் அதே நாள் அதே திங்கட் கிழமையன்று உயிர் துறந்தார்கள்.

அவர்கள் புனித உலகம் புகுந்த செய்தி காட்டுத் தீயைப் போல் நகரெங்கும் பரவிவிட்டது. மக்கள் யாவரும் பள்ளி வாசலில் வந்து கூடினார்கள்.

ஹஸரத் உமர் அவர்கள், கூட்டத்தின் மத்தியில் உருவிய வாளுடன் நின்று கொண்டு, யாராவது பெருமானவர்கள் இறந்து போனதாகச் சொன்னால் தலையை வெட்டிவிடுவேன் என்று அச்சுறுத்திக் கொண்டிருந்தார்கள். பெருமானைச் சாவு தீண்ட முடியாது என்பது அவருடைய எண்ணம்—நம்பிக்கை.

ஹஸரத் அபூபக்கர் அவர்கள் வந்தார்கள். உள்ளே சென்று போர்வையை நீக்கிப் பெருமானின் முகத்தைக் கண்டார்கள். முழங்காலிட்டுப் பணிந்து அந்தத் திருமுகத்தில் முத்தமிட்டார்கள்.

''பெருமானே, உயிருடன் இருந்த போதும் இனிமையாய் இருந்தீர்கள்; இறந்த பின்னும் அதே இனிமையுடன் விளங்குகிறீர்கள்'' என்று கூறிவிட்டு மீண்டும் ஒருமுறை முத்தமிட்டுப் போர்வையை இழுத்து மூடிவிட்டு வெளியில் வந்தார்கள்.

உருவிய வாளுடன் நின்று கொண்டிருந்த ஹஸரத் உமர் அவர்களை நோக்கி, ''உமர், பேசாமல் கீழே உட்காருங்கள்'' என்று ஆணையிட்டார்கள்.

மக்கள் கூட்டத்தின் மத்தியில் போய் நின்றார்கள்.

''மக்களே, முஹம்மது அவர்களை யாராவது வணங்குகிறவர் இருந்தால், அவர் இறந்துவிட்டார் என்பதை அறியுங்கள். அல்லாவை வணங்குகிறவர்கள் அவர் இறப்பவரில்லை என்பதை அறியுங்கள்'' என்று கூறினார் ஹஸரத் அபூபக்கர்.

அவர் தொடர்ந்து, ''முஹம்மது ஒரு தூதரே யன்றி வேறல்லர்; அவருக்குமுன் எத்தனையோ தூதர்கள் இறந்துபோயிருக்கிறார்கள். அவர் இறந்து போனாலும் அன்றி வெட்டுண்டாலும் நீங்கள் திரும்பிய கால்களுடன் பின்வாங்குவீர்களா? யார் திரும்பிய கால்

களுடன் பின்வாங்குவானேயானால் அவன் அல்லாவிற்கு எவ்வகையிலும் தீங்கியற்றவியலாது. அல்லாவின் பால் நன்றி காட்டுபவர்களுக்கு அதற்குரிய பலனை அல்லா கொடுப்பான்'' என்னும் திருக்குர்ஆன் திருமொழியை உரைத்தார்கள்.

ஹஸரத் அபூபக்கர் அவர்களின் மொழிகளைக் கேட்டபின்னர்தான் பெருமான் இறந்துவிட்டார்கள் என்ற செய்தியைப் பலர் நம்பினார்கள்.


துயரம் தாங்கமுடியாமல் ஹஸரத் உமர் அவர்கள் மெய்ந்நடுங்கிக் கீழே சாய்ந்துவிட்டார்கள். சில ஸஹாபாக்கள் மயக்கமுற்றார்கள். சிலர் ஏங்கிஏங்கி யழுதார்கள்.

நபிமார்களை அவர்கள் மரணமடைந்த இடத்திலேயே அடக்கம் செய்தல் வேண்டும் என்று பெருமான் அவர்கள் கூறியதை நினைவு வைத்துக் கொண்டு, உரிய சடங்குகளை முறைப்படி செய்து முஸ்லிம்கள் அனைவரும் பிரார்த்தனை செய்து அவ்விடத்திலேயே அடக்கம் செய்தார்கள்.

இறையுன் புனிதத் திருத்தலமும்
இனிய நபியாம் திருத்தூதர்
உறையும் புனிதத் திருத்தலமும்
ஒவ்வோர் முஸ்லிம் மைந்தனுமே

முறையொன் றேனும் கண்டிடவே
முழுதும் அருள்க! நல்லறமே
நிறையும் பெருமான் வழிபற்றி
நிற்க அருள்க! அருள்கவே!

ஓர் உருதுக் கவிஞரின் பாட்டு இது. இப்பாட்டின் கருத்து: ''ஒவ்வொரு முஸ்லிமும் நபிகள் நாயகத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கவேண்டும். வாழ்வில் ஒரு முறையேனும் புனிதத் திருத்தலமாகிய கஅபாவையும் நபிநாயகம் அவர்களின் அடக்கத் தலத்தையும் காணவேண்டும்; அதற்கு ஆண்டவன் அருள்புரிய வேண்டும்'' என்பதாகும்.



# யாரே காப்பார்?

சண்டை ஒன்று முடிந்தவுடன்
தனியாய்ப் பெருமான் வரும் வழியில்
கொண்ட களைப்பு நீங்கிடவே
குளிர்ந்த நிழலில் தங்கினரே.

போர்வா ளதனை மரக்கிளையில்
பொருத்தி வைத்தே பெருமானார்
சோர்வு நீங்கிக் கண்ணயர்ந்து
துயில லானார் மரத்தடியில்.

பகைவன் ஒருவன் தற்செயலாய்ப்
பார்த்தான் பெருமான் தூங்குவதை
மிகவும் மகிழ்ச்சி கொண்டவனாய்
மெதுவாய் அருகில் வந்தனனே.

ஏதோ ஓசை கேட்டதனால்
எழுந்த பெருமான் தலைமாட்டில்
சூதாம் எண்ணம் கொண்டவனாய்த்
தோன்றி நின்றோன் தனைக்கண்டார்.

பெருமா னுடைய வாளதனைப்
பிடித்து நின்ற அம்மனிதன்
''அருமை நபியே, இந்நேரம்
யாரே காப்பார் உமை?' 'யென்றான்.

''அல்லா!'' வென்றார்; அம்மொழியில்
அடங்கி யிருந்த தென்கொல்லோ!
பொல்லா மனிதன் நடுநடுங்கிப்
போட்டு விட்டான் வாளதனை.

விழுந்த வாளை எடுத்தந்த
விந்தைப் பெருமான் தீயோனை
அழுந்த நோக்கி "உனைக்காப்பார்
யாரே?" என்று கேட்டாரே.

"யாரும் இல்லை உமையல்லால்
ஐயா" என்று பயத்தாலே
தீரும் நிலையில் உள்ளவனைத்
திருவார் நபிகள் கண்டாரே.

"அருளும் நாயன் தயவாலே
அன்பா உனைநான் மன்னித்தேன்
இருளும் எண்ணம் விலக்கிடுவாய்
இனிது வாழ்வாய் செல்" லென்றார்.

கொல்ல வருவார் தமைக்கூடக்
குளிர்ந்த அருளால் மன்னிக்கும்
நல்ல உள்ளம் படைத்தவரே
நாயன் தூதர் அறிவீரே.



# தமிழாலயம் வெளியீடுகள்

## நாரா நாச்சியப்பன் எழுதியவை

| | | | |
|---|---|---|---|
| 1. | நாச்சியப்பன் பாடல்கள் I | ... ரூ. | 15 00 |
| 2. | நாச்சியப்பன் பாடல்கள் II | ... ரூ. | 15 00 |

## சிறுவர் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 3. | பஞ்சதந்திரக் கதைகள் | ... ரூ. | 10 00 |
| 4. | இறைவர் திருமகன் | ... ரூ. | 4 00 |
| 5. | மாயத்தை வென்ற மாணவன் | ... ரூ. | 3 00 |
| 6. | தாவிப் பாயும் தங்கக்குதிரை | ... ரூ. | 2 50 |
| 7. | அசோகர் கதைகள் | ... ரூ. | 2 00 |
| 8. | பறவை தந்த பரிசு | ... ரூ. | 4 00 |
| 9. | வெள்ளைக் காகம் (செல்வி வைலா) | ... ரூ. | 2 00 |